புத்தகங்கள்

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 28 வியாழக்கிழமை (12.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily இதழ்:106

# தற்கொலைத் தாக்குதல்களைத் தடுக்க அரசு விசேட பாதுகாப்புத் திட்டம்

## பொது நிகழ்வுகளை நடத்த அமைச்சின் அனுமதி தேவை

கொழும்பு, மார்ச் 12

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கும் பொருட்டு அரசாங்கம் புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குகொள்ளும் அனைத்து நிகழ்வுகளுக்கும் இனி மேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும் என்பதே அந்த புதிய பாதுகாப்புத் திட்டம் என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

அந்தந்தப் பிரதேசத்தில் நடைபெறும் பொது நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட பிரதேச பொலிஸ் அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல இது சம்பந்தமாக அறிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை நிலைநாட்டும் முக்கிய கட்டத்தை அரசு நெருங்கியுள்ள வேளையில் பயங்கரவாதிகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் மக்களின் சக வாழ்வைச் சீர்குலைப்பதற்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அங்குரஸ்ஸ குண்டு வெடிப்பு; 4 பொலிஸ் குழுக்கள் விசாரணைக்கு

கொழும்பு, மார்ச் 12

மாத்தறை அக்குரஸ்ஸ கொடாபிட்டிய பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

'விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஏற்பாட்டின் பலவீனத்தை தற்கொலைக் குண்டுதாரி பயன்படுத்தினாராம்

கொழும்பு மார்ச் 12

அக்குரஸ்ஸவில் இடம்பெற்ற தாக்குதல், பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட பலவீனத்தாலேயே நடந்தேறியது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் இடம்பெற்ற பகுதி ஊடான வாகனப் போக்குவரத்து சில மணி நேரமாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் அப் பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் வாகனப் போக்குவரத்தை அனுமதித்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தற்கொலைதாரி உள்ளே வந்துள்ளார் என தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-1)

## இனிமேலாவது சர்வதேச சமூகம் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்குமா?

### அமைச்சர் யாப்பா கேட்கிறார்

கொழும்பு, மார்ச் 12

மாத்தறையில் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலையடுத்தாவது ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு சர்வதேச நாடுகள் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் பல முனைகளில் கடும் சண்டை கரும்புலிகள், கிட்டுப் படையணியினர் ஊடறுத்துத் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 12

முல்லைத்தீவுக் களமுனைகளில் அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுஞ் சண்டை இடம்பெற்று வருகின்றது என படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

செவ்வாயன்று நடந்த சண்டையின்போது கரும் புலிகளும் பல இடங்களின் ஊடறுத்துத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சமர்களில் இரு தரப்புகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டன என்றும் படைத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

55ஆவது, 57ஆவது, 58ஆவது, 59 ஆவது மற்றும் விசேட படையணி - 8 ஆகியன விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பின் மத்தியிலும் முன்னேறிச் செல்லுகின்றன என்றும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

''நேற்று மதியம் வரையிலான 24 மணி நேரச் சண்டையில் குறைந்தது 15 விடுதலைப் புலிகள் வரை உயிரிழந்தனர். மேலும 24 பேர் காயமடைந்தனர். எமது தரப்பில் இராணுவத்தினர் பலர் படுகாயமடைந்தனர்'' என்று இராணுவத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, குப்பிளான்குளம், புதுமாத்தளன் மற்றும் முல்லைத்தீவுக்குச் சமீபமாகவுள்ள பகுதிகளிலேயே இச்சண்டைகள் மூண்டிருந்தன.

அதேவேளை, புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 7 மணிமுதல் இரவு 7 மணி வரை 53 ஆவது படைப்பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைத்தரப்புக்கு இழப்புகள் ஏற்பட்டன என்று தேசிய பாதுகாப்புக்கான (16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் உற்பத்திப் பொருள்களுடன் 9 லொறிகள் இன்று கொழும்பு புறப்படுகின்றன

யாழ்ப்பாணம் மார்ச் 12

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று முன்தினம் வந்து சேர்ந்த லொறிகளில் ஒன்பது லொறிகள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுடன் இன்று காலை கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ளன.

ஏ-9 பாதை ஊடாக 22 லொறிகள் அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று முன்தினம் இரவு நாவற்குழிக் களஞ்சியத்தை வந்தடைந்திருந்தன. அந்த லொறிகளில் இருந்து பொருள்கள் இறக்கி முடிந்ததை அடுத்து அவை இன்று கொழும்பு நோக்கி புறப்படவுள்ளன.

அவற்றில் 9 லொறிகளில் 48,250 கிலோ வெங்காயம், 1300 கிலோ பீற்றூட், 5000 கிலோ றால், 5000 கிலோ கருவாடு ஆகியன ஏற்றிச் செல்லப்படுவதாக அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 14 ஆம் பக்கத்தில்)

## சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்காவிடில் ஒரு மாதத்தில் அரசுக்கு பெரும் நிதி நெருக்கடி

### ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக் காட்டுகின்றது!

கொழும்பு, மார்ச் 12

சர்வதேச நாணய நிதியத்திடம் அரசு விண்ணப்பித்திருக்கும் கடன்தொகை உடனடியாகக் கிடைக்காவிட்டால் இன்னும் ஒரு மாதத்தில் அரசு பாரிய நிதிநெருக்கடியைச் சந்திக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இதன்மூலம் நாடு ஸ்தம்பித்துப் போய்விடும் என்றும் அக் கட்சி எச்சரித்துள்ளது.

அரசைக் கொண்டு நடத்த இந்த வருடத்துக்கு மாத்திரம் 40 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகிறது என்றும் ஆனால், அரசு 19 ஆயிரம் கோடி ரூபாவையே கடனாகப் பெற சர்வதேச நாணய நிதியத்திடம் விண்ணப்பித்துள்ளது என்றும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்லவே இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை

(16 ஆம் பக்கம் பார்க்க)




## மாத்தறைத் தாக்குதலுக்கு பிரிட்டன் கடும் கண்டனப்

### பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 1.

மாத்தறையில் மத நிகழ்வொன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்துள்ள பிரிட்டன், இலங்கையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பொதுநலவாய அமைச்சர் இது தொடர்பாக பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் லோர்ட் மல்லோச் பிரவுண் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அறிவித்தல்

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 16.03.2009 முதல் 13.04.2009 வரை ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 5 மணிமுதல் - மாலை 6 மணி வரை நடைபெறும். இந்த நிகழ்வை முன்னிட்டு (14.03.2009) அன்று முற்பகல் 10 மணி தொடக்கம் கடைகள் ஏலத்தில் விடப்படும். முழுப்பணத்தையும் நிர்வாகத்திடம் கட்டி கடைகளை பெற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

இ.சிவகுரு
தர்மகர்த்தா.

## Anu Make up and Academy

பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட
Anu Make up and Academy யில்

Hindu Bride — Chiristian Bride
Normal Facial — Furit Facial
Hair Style (modern Style)
Bridal Dressing
Hair Ironing



போன்றவை பெண்களுக்காக பயிற்றுவிக்கப்படும். ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பயனடைவீர்கள். இன்றே முந்துங்கள்.
01.04.2009 இற்கு முன் நேரில் சமுகமளிக்கவும்.

ராஜா பிளாஸா,
பலாலி றோட், கோண்டாவில்.
T.P.077 6675033
S.Anusha.

## கண்ணீர் அஞ்சலி



எனது நீண்டநாள் உயிர் நண்பன்
### சரவணமுத்து இராசையா

காலமான செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கதிர் வேலவன் அரிசி ஆலை,
கைதடி கிழக்கு, கைதடி.

சி.கனகரத்தினம்.

## கண்ணீர் அஞ்சலி



### சரவணமுத்து இராசையா

அவர்கள் கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான பொருளாளராகவும், தலைவராகவும் நீண்ட காலம் ஆலய வளர்ச்சிக்கு அரும்பெரும் பணியாற்றிவந்துள்ள பெருந்தகையின் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் மூழ்க வைத்துள்ளது. இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கந்தப் பெருமானின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்

கயிற்றசிட்டி
கந்தசுவாமி கோயில்,
கைதடி வடக்கு,

பரிபாலன சபையினர்.

## மாத்தறையில் காயமடைந்தோரில் 31 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சை

கொழும்பு, மார்ச் 12

மாத்தறை, அக்குரஸ்ஸ, கொடப்பட்டியப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த 31 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அமைச்சர் மஹிந்த விஜயசேகர உட்பட ஐவர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமைச்சர் மஹிந்த விஜயசேகரவுக்கு நேற்றுமுன்தினம் நரம்பியல் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அவரின் உடல்நிலை தேறிவருகிறது என கொழும்புத் தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, நேற்றுமுன்தினம் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 44 பேரில், 26 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று மாத்தறை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-சி)

## சுதந்திரக்கட்சியின் அலுவலகங்களாக மாற்றம்

கொழும்பு,மார்ச் 11

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை அலுவலகம் உட்பட அனைத்து அலுவலகங்களும் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகங்களாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

த.ம.வி.புலிகள் கட்சியின் தலைமை அலுவலகமான களுவாஞ்சிக்குடியில் நேற்றுமுன்தினம் இதன் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சியின் உறுப்புரிமை பெற்று தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சராக பதவியேற்றதை அடுத்து இந்த மாற்றம் நடை முறைக்கு வந்துள்ளது.

தலைமை அலுவலகம் உட்பட செட்டிப்பாளையம்,கல்லாறு, பழுகாமம், கொக்கட்டிச்சோலை உள்ளிட்ட அலுவலகங்களும் சுதந்திரக்கட்சியின் உத்தியோகபூர்வ அலுவலகங்களாக நேற்று மாற்றப்பட்டன. (அ-06)

## விற்பனைக்கு

7½ - 750 w சைனா மோட்டார், இந்தியன் என்ஜின், யன்மார் ஜெனரேட்டர் மற்றும் மா குழைக்கும் மெசின், பாண் வெட்டும் கட்டர், பேக்கரி உபகரணம் என்பன விற்பனைக்குண்டு.

கிருஷிகேசன் வெதுப்பகம்
2 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

## திருமண சேவை

சுவிஸ், கனடா, ஜேர்மனி,டென்மார்க், லண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவீடன், இந்தியா ஆகிய நாடுகளில் P.R. உடைய தொழில்புரியும் மணமக்கள் விவரங்கள்எம்மிடம்உண்டு.தொலைபேசி ஊடாக விவரங்களை அறிந்து கொள்ளலாம். படம், ஜாதகம்; குடும்ப விவரங்களை எமது E.mail முகவரிக்கு அனுப்பவும்.
T.P. 0778501013, 0776184434, 0774047531
E.mail: Vaniimb@yahoo.com

## மணமகள் தேவை

வடமராட்சி, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது, செவ்வாய்க் குற்றமற்ற கிரகபாவம் 60, பட்டதாரி மணமகனுக்கு 3 வயதுக்கு கீழ்ப்பட்ட படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: தொ.பே: 0776085072

## வரவேற்று வாழ்த்துகின்றோம்



உயர் திரு.
மா.நவநீதமணி B.A
(அதிபர் சேவை)
09.03.2009 தொடக்கம்
யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள

உயர் திரு. மா.நவநீதமணி B.A அவர்களை வரவேற்பதில் மகிழ்வுறுகின்றோம். அவரது சேவைக்காலத்தில் கல்லூரி மேன்மேலும் வளர எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெல்லியடி கிழக்கு.

Dr. வே.கமலநாதன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்த சுவாமி கோவில் தர்ம பரிபாலன சபைத் தலைவரும் முன்னாள் கைதடிச் சந்தி ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய

### சரவணமுத்து இராசையா

அவர்களின் மறைவு எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியைத் தருகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி.

கைலாயபிள்ளை சுகிதரன்
குடும்பத்தினர் (லண்டன்).




அமரர் சின்னத்தம்பி-பொன்னம்மா தம்பதிகளின்
மகளும் சின்னையாமுத்துவின்
மனைவியுமான பரமேஸ்வரி
10.02.2009 அன்று காலமானார்.

அன்னார் சிந்தாமணி, அமரசிங்கம், கனகசிங்கம், ஜெகராசசிங்கம், இராசசிங்கம், குணசிங்கம், கைலாசபிள்ளை, விஜயா ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12.03.2009) வியாழக்கிழமை இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

ஆனைக்கோட்டை.

தகவல்: சகோதரர்கள்.


## இதோ உங்களுக்காக...!

**MOTHER BOARD**
MSI - 5,500/=
Foxconn - 5,600/=
Biostar - 5,900/=
Intel G31- 7,700/=

**LCD MONITOR**
17" LCD Monitor - 16,500/=
19" LCD Monitor - 19,500/=
22" LCD Monitor - 31,000/=

**PROCESSOR**
Intel 1.8Ghz celeron - 4,750/=
Intel 1.8Ghz Dualcore - 7,500/=
Intel 2.0Ghz Dualcore - 8,400/=

**DVD WRITER**
LG - 3,100/=
Samsung - 3,400/=
Asus - 3,900/=
Sony - 4,000/=

**VGA CARD**
Agp 128MB Nvidia - 4,500/=
512MB Pci Express - 7,500/= (Asus/Geforce)
Geforce 1GB - 12,500/=

**HARD DISK**
40GB Sata - 4,500/=
80GB Sata - 4,700/=
160GB Sata - 5,000/=
250GB Sata - 6,100/=

**TONER**
12A - 5,200/=
92A - 5,200/=
49A - 5,200/+
13A - 5,300/=

**ACCESSORIES**
Hp Laserjer - 13,750/=
Epson LQ300+II - 21,500/=
ATX HandleCasing(500W) - 4,250/=
Pendrive Capturecard - 7,900/=
Power Supply - 1,750/=
Web Camara - 1,400/=
Card Reader - 700/=
56K Modem - 700/=
LGA Processor Fan - 1,100/=
Optical Mouse - 500/=
Sound Card - 950/=
Tv Card - 2,900/=

**PORTABLE HARD DISK**
160GB usb Power - 9,900/=
250GB usb Power - 11,900/=
320GB usb Power - 13,900/=

**PEN DRIVE**
1GB - 650/=
2GB - 850/=
4GB - 1,150/=
8GB - 1,950/=

**RAM**
Kingston 1GB DDR11 - 1,750/=
Kingston 2GB DDR11 - 3,200/=
Kingston 512MB DDR1 - 3,100/=
SD Ram 128MB - 900/=
SD Ram 256MB - 1,600/=

**MP3 PLAYER**
1GB 2,500/=
2GB 3,000/=

**SONY MP3 PENDRIVE**
* 1GB * FM Radio
* Pendrive * Head Phone
* MP3 * External Micro SD
* Voice Recording Solt
4,250/=

**MP4 PLAYERS**
*2GB (Expand 2 GB)
*Camara *FM Radio
*MP3 *Games
*Voice Recording
*USB Cable *Power Charger
*Head Phone *Driver CD
8,500/=

**SONY MP4 & MP3**
*2GB
* FM Radio
*MP3 *Games
*VoiceRecording
*USB Cable
*Head Phone

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## தரம் 5 ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வேலணை, மார்ச் 12

தீவக வலயப் பாடசாலைகளில் தரம் 5 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாளும் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்தச் செயலமர்வுகள் தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] (…-267)

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் உதயகுமார் (குமார்)
(புடைவை வர்த்தகர்-புத்தளம்)

புத்தளத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் உதயகுமார் (09.03.2009) திங்கட்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், பலகாடு காரைநகரைச் சேர்ந்த சோமசுந்தரம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானமலரின் அன்புக் கணவரும், சதீஸ் (11ஆம் ஆண்டு மாணவன், பு/இந்து மத்திய கல்லூரி), சிந்துயா (8ஆம் ஆண்டு மாணவி, பு/பாத்திமா மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபத்மராஜா, மகேந்திரராஜா, பத்மராணி, பத்மமலர், சந்திரகாந்தன், துஷாந்தினி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தளம் தில்லையடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

114,நெடுங்குளம் வீதி, புத்தளம்.
T.P.032-2267462

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜோன் ஹோம்ஸுக்கு ஒரு விண்ணப்பம்

வன்னியிலிருந்து-முல்லைத்தீவிலிருந்து -விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து - வரும் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்கள் சர்வதேச தரத்துடன் இருக்கவேண்டும். அவ்வாறில்லை என்றால் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகள் நிறுத்தப்படும்.

இவ்வாறு எச்சரிக்கும் தொனியில் தெரிவித்திருக்கிறார் ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ்.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் நிறுவப்படும் அகதி முகாம்கள் குறித்து செய்தியாளர்கள் தொடுத்த கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று, தங்களுக்கு அகதிகளுக்குரிய வசதிகள் அரசினால் செய்து தரப்படும் என்ற நம்பிக்கையோடு வவுனியா அகதி முகாம்களுக்கு - அரசாங்கத்தின் வாசகப்படி, நலன்புரி நிலையங்களுக்கு - நலன்புரிக் கிராமங்களுக்குச் - சென்றார்கள்.

வன்னி மக்களுக்கான நலன்புரி நிலையங்கள் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் சொந்தச் செலவிலேயே, முழுச் செலவிலேயே நடத்தப்படுவதாகக் காட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடனும் அவை நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்ற விவரம் இப்போது தெரியவந்துள்ளது.

இந்த நிலையங்கள் தடுப்பு முகாம்கள் போன்று இயங்குகின்றன என்றும் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உரிய வசதிகள் செய்யப்படவில்லை என்றும் தகவல்கள், செய்திகள் வெளியானபோது அரசு அவற்றை மறுத்தது.

அந்தத் தகவல்கள் தவறானவை என்றும், அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காகச் சோடிக்கப்பட்டவை என்றும் மனித உரிமைகள் அமைச்சர் சீறிப் பாய்ந்தார். அதன் உள்ளார்த்தத்தை இப்போது ஓரளவில் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

அகதிகளுக்குரிய சர்வதேச தரத்தில் வன்னி மக்களுக்கு வசதிகள் செய்யப்படவில்லை என்றால் அகதி முகாம்களுக்கு என்ற மேல்மூடியுடன் ஐ.நா. மற்றும் உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்தோ, வெளிநாடுகளில் இருந்தோ நிதி உதவி கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சமும் அமைச்சரின் ஆத்திரத்துக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்.

அதனாலேயே ஐக்கிய நாடுகளின் உயர் அதிகாரி ஜோன் ஹோம்ஸை அழைத்து வந்து வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களை-அகதி முகாம்களை - காண்பிக்க அரசு முனைப்புடன் அப்போது செயற்பட்டது.

அவர் அங்கு விஜயம் செய்வதற்கு முன்பதாக வவுனியாவில் தடல்புடல் ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளிவந்தன. எப்படியோ, மேற்கூறிய உள்நோக்கத்தை நிறைவேற்றி அரசு தனது சாதுரியத்தால் அதில் வெற்றியும் கண்டுள்ளது எனலாம்.

எனினும், பல பூசி மெழுகுதல்களுடனும், தாஜா பண்ணும் ஏற்பாடுகளோடும் அரசு தனது நோக்கத்தை - நலன்புரி நிலையங்களை அமைக்கவும், பராமரிக்கவும் வெளியிலிருந்து உதவிநிதி பெறும் திட்டத்தை- அடைந்திருப்பது வாஸ்தவம் தான்!

ஆனால்-

இப்போது-

ஐ.நா.வின் மனிதாபிமானப் பணிகளுக்குப் பொறுப்பான மிக உயர் அதிகாரியான ஜோன் ஹோம்ஸ், இலங்கை அரசு, வன்னி மக்களுக்கான அகதி முகாம்கள் சர்வதேச தராதரத்தில் நிர்வகிக்கப்படவில்லை என்று மறைமுகமாகக் கூறும் தொனியில் ஹோம்ஸ் கருத்து வெளியிட்டிருப்பது அரசுக்கு அளிக்கப்படும் 'அதிர்ச்சி வைத்தியம்' என்றே கொள்ளலாம்.

வவுனியாவில் அமைக்கப்படும் நலன்புரி நிலையங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை சில உதவிகளை வழங்குகிறது. எனினும் அந்த முகாம்களில் மக்களுக்கு நடமாட்ட சுதந்திரம் இன்மை குறித்து கவலை கொண்டுள்ளோம் என்று ஹோம்ஸ் கூறியதன் மூலம், ஐ.நா. அதிகாரிகள் நலன்புரி நிலையங்களில் நடப்பதெல்லாவற்றையும் உரிய வழியில் அவர்கள் திரட்டுகிறார்கள் என்பது வெளிப்படுகிறது.

அதனால்-

மனித உரிமைகள் காப்பகம் தனது அறிக்கைகளை சொந்தத்தில் திரட்டாத தகவல்களை அடிப்படையாக வைத்தே, ஊதிப்பெருத்து வெளியிடுவதாக அமைச்சர் சமரசிங்க கூறியிருப்பது போன்று, ஜேம்ஸ் ஹோம்ஸின் எச்சரிக்கையைச் 'சமாளிக்க' முடியாது!

வவுனியாவில் நிறுவப்பட்டுள்ள அகதிமுகாம்கள் சர்வதேச தராதரத்துக்கு அமைய இயக்கப்படாவிட்டால், நாம் நிதி உதவி வழங்குவதை அது பாதிக்கும். அதனால் அந்த முகாம்களில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள். முகாம்களின் நிலைமை குறித்து உன்னிப்பாக அவதானித்த பின்னரே நீண்ட கால நிதி உதவி குறித்து தீர்மானிக்க நேரிடும் என்று ஜோன் ஹோம்ஸ் கூறியிருப்பது பெரும் அவதானிப்புகளின் அடிப்படையில் என்பதனை அரசு உணர்ந்து கொள்ளுமா அல்லது இது விடயத்திலும் ஒளித்துப் பிடித்து விளையாட முயலுமா?

நிர்க்கதிக்கு ஆளாகியிருக்கும் தமிழ்மக்கள் அரசின் மூடி மறைப்புப் போக்கினால் பாதிக்கப்படக்கூடாது; ஐக்கிய நாடுகள் சபையின் நிதிஉதவி நிறுத்தப்படக்கூடாது. அதனைத் தடுப்பதற்கு உகந்த மார்க்கம்-அப்பழுக்கில்லாத விதிமுறை - உண்டு. அது குறித்து ஜோன்ஸ் ஹோம்ஸ் சிந்திக்கவேண்டும். எடுத்தேன், தொடுத்தேன், விடுத்தேன் என்ற மார்க்கத்தை மனதில் எண்ணக்கூடாது.

பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவு வதிலிருந்து விலகிப்போய் அவர்களை நிர்க்கதிக்கு ஆளாக்கக் கூடாது.

வவுனியாவில் நிறுவப்பட்டுள்ள, நிறுவப்படவுள்ள அகதிமுகாம்களை நிர்வகிக்கும் பணியில் ஐ.நா.தனது அதிகாரிகளையும் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் - அதுவே சிறந்தது.

ஜோன்ஸ் ஹோம்ஸும் ஐ.நா.வும் இத்தகைய ஆக்கபூர்வமான மாற்று ஏற்பாடு குறித்து சிந்திக்கவேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

# கொடிகாமம், மிருசுவில் நலன்புரி நிலையங்களிலுள்ள மாணவர்களுக்கான பாடசாலை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

கொடிகாமம், மிருசுவில் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான பாடசாலை இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொடிகாமம் அ.த.க.பாடசாலை வளாகத்தில் 'யுனிசெவ்' நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட தற்காலிக வகுப்பறைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் நிலவும் போர் சூழல் காரணமாக பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர்ந்த நிலையில் கொடிகாமம், மிருசுவில் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களில் பெரும் பாலானோர் மாணவர்களாக உள்ளமையால் அவர்களின் கல்வி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கொடிகாமம் அ.த.க.பாடசாலை வளாகத்தில் 'யுனிசெவ்' நிறுவனத்தால் தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த வகுப்பறைத் தொகுதியில் நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(203-207)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு புதிய நடைமுறை 23 ஆம் திகதி அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை மேற்படி திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறைக்கு அமைவாக அறிமுகப்படுத்தப்படவுள்ள விண்ணப்பப் படிவங்கள் மேற்படி திணைக்களத்தால் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(201)

# தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் மும்முரம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்ததையடுத்து காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்பட்ட வயல்களில் சிறுதானியப் பயிர்களைப் பயிரிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயறு, உழுந்து, கௌபி, சணல் போன்ற சிறுதானியங்கள் பயிரிடுவதில் மும்முரமாக விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த வருடம் மழை வீழ்ச்சி குறைவாக இருந்ததால் வயல்களுக்கு கிணறு, குளம் ஆகியவற்றிலிருந்து நீர் பாய்ச்சியதாகவும் நெல் அறுவடையின் போது வயல்களில் ஈரலிப்புத் தன்மை இல்லாததால் சிறுதானியம் பயிரிடுவதில் அக்கறை செலுத்தவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சிறுதானியப் பயிர்கள் விதைப்பதற்குத் தேவையான மழை பெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

# புல்மோட்டை தற்காலிக வைத்தியசாலை இந்திய உதவியுடன் நாளை முதல் செயற்படும்

திருகோணமலை, மார்ச் 12

திருகோணமலை புல்மோட்டையில் இந்திய உதவியுடன் அமையவுள்ள தற்காலிக தள வைத்தியசாலை நாளை வெள்ளிக்கிழமை முதல் செயற்படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

முல்லைத்தீவிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் வழியாக அழைத்து வரும் காயமடைந்த மற்றும் நோயி னால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகவே விசேடமாக இந்த வைத்தியசாலை செயற்படவிருக்கின்றது.

அவசர சிகிச்சைப் பிரிவை உள்ளடக்கியதாக இல்மனைட் தொழிற்சாலை வளாகத்திற்குள் அமையவிருக்கும் இவ்வைத்தியசாலை 50 படுக்கைகளைக் கொண்டிருக்கும்.

இதற்கு இந்தியா 7 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களையும் மருந்துகளையும் வழங்கியுள்ளதோடு மருத்துவர்களையும் மருத்துவ உதவியாளர்களையும் அனுப்பி வைத்துள்ளது.

(மற்றொரு செய்தி 12 ஆம் பக்கத்தில்)

# போலி நகைகளை அடகு வைக்க முற்பட்டவர் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்

வலி.வடக்கு, மார்ச் 12

போலி நகையை வங்கியில் அடகு வைக்க முற்பட்ட நபர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் போலி நகைகளை அடகுவைக்கச் சென்ற ஒருவரின் செயற்பாட்டில் வங்கி ஊழியர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

ஊழியர்கள் இந்த விடயம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

உடன் விரைந்து நடவடிக்கையில் ஈடுபட்ட சுன்னாகம் பொலிஸார் வங்கிக்குச் சென்று சந்தேகநபரைக் கைது செய்தனர். அத்துடன், அவரிடம் இருந்து ஆறு பவுண் நிறையுடைய போலி நகைகளையும் மீட்டுள்ளார்கள்.

அளவெட்டியைச் சேர்ந்த சந்தேக நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

(203-86)

# ஆண்டு நிறைவு விழா

கட்டைவேலி,மார்ச்.12

அல்வாய் மெதடிஸ்த திருச்சபைத் தேவாலயத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு என். அருள்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட நன்றி தெரிவிக்கும் வழிபாடும் இடம்பெறும்.

(203-236)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 2 இதயத் துடிப்புப் பதிவாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஈ.சீ.ஜி.சிகிச்சைப் பிரிவுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு இதயத்துடிப்புப் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 22 வருடங்களின் பின்னர் இப் பிரிவுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவரும் கடந்த 8ஆம் திகதி முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இப்பிரிவில் ஒருவர் மட்டுமே இதயத் துடிப்புப் பதிவாளராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(50-9-78)

# மீன் பதனிடும் தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவுவதாக ஜீ.ரி.இசற் உறுதியளிக்கவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நவீன வசதிகளுடனான மீன் பதனிடும், பொதி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க உதவுவதாக ஜி.ரி.இசற் நிறுவனப் பிரதிநிதிகள் உறுதியளிக்கவிலை-என்று கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் அறிவித்துள்ளார்.

ஜி.ரி.இசற் பிரதிநிதிகள் எமது சங்கத்துக்கு வருகை தந்திருந்த போது சங்கம் தொடர்பான பொது விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்கள். ஆயினும் எந்தவொரு திட்டத் திற்கும் உதவி செய்வதாக உறுதியளிக்கவில்லை. அந்தவகையில் நவீன வசதிகளுடன் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தருவது குறித்து அவர்கள் பிரஸ்தாபிக்கவில்லை- என்றும்

இம்மாதம் 7ஆம் திகதிய உதயனில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய மீன் பதனிடும் தொழிற்சாலை - ஜி.ரி. இசற் நிறுவனம் அமைத்துக் கொடுக்கும் என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து அனுப்பிய கடிதத்தில் சங்கத் தலைவர் விவரித்துள்ளார். (ஆ-ர்)

## நாளை

| | |
|---|---|
| மாசி 29 | 13.03.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | துதியை மு.ப. 07.03 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் மு.ப.08.19 வரை |
| சுபநேரம்: | 06.21 - 07.51 |
| ராகுகாலம்: | 10.51 - 12.21 |

# நலன்புரி நிலையங்களில் 2,849 பேர் தங்க வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் அமை க்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோருக்கான நல்ன்புரி நிலையங்களுக்கு நேற்று முன்தினம் வரை இரண்டாயிரத்து 849 பேர் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது .

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் ஆயிரத்து 313 பேரும், கொடிகாமம் நலன்புரி நிலையத்தில் 706 பேரும் கைதடி ஆயுள்வேத மாணவர் விடுதிகளில் 647 பேரும், கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் 183 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

(203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்



### அமரர் பிரான்சிஸ் ஜோர்ஜ்

அன்பின் இருப்பிடமே
எங்கள் அருமை அண்ணாவே
உடன் பிறவா விடினும் - நீர்
எங்கள் உண்மையான அண்ணாவே
எங்கே சென்று விட்டீர்
எம்மிடம் சொல்லாது
ஏங்கித் தவிக்கின்றோம்
எப்படி நாம் ஆறிடுவோம்
உங்கள் பிரிவால் துயருறும்

**அன்பின்** : அன்ரி, சின்னையா,
தங்கை குடும்பம் - நரேஷ், தர்மினி, ஜெனிபர்
தங்கைகள்: பிறேமினி , றோபா.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு அரச உத்தியோகம் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர், வெளிநாட்டு சிற்றிசன் உடைய சொந்தத் தொழில் பார்க்கும் மணமக்களும் உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும் பதிவு இலவசம்.

**துர்க்கா திருமண சேவை**
இல.09, சங்கிலியன் வீதி , நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4591417

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிட்டிணன் இராசமணி

தோற்றம்: 16.04.1947
மறைவு: 23.03.2003

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
அம்மா என்று அழைக்க ஆளில்லையே
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் அம்மா
எல்லாம் வல்ல வேதவன விநாயகனே
நல்லபிறவி கொடுத்தருள வேண்டுமென்று
மனதுருகி மன்றாடிக் கரம் கூப்பி வணங்கி நிற்கும்

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி கலை ஒளி வீதி

**S.K. துரைரத்தினம்.**

## சாவகச்சேரியில் ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஆறாவது தொகுயினருக்கான ஆங்கில பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சிநெறியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்தவர்கள் தமது கல்வித் தகைமைச் சான்றிதழ்களின் மூலப் பிரதியினையும் புகைப்படப் பிரதியினையும் கொண்டு வருமாறு கழகச் செயலாளர் லயன் எஸ்.கேநவரத்தினம் அறிவித்துள்ளார்.

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்திபெற்ற மாணவர்களும் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும் இப் பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(203-207)

## 45 ஆம் நாள் நினைவுப் பூக்கள்



அன்னையின்
மடியில்:
10.07.1962

காலனின்
கையில்:
27.01.2009

### அமரர் பிரான்சிஸ் ஜோர்ஜ்

பிணம் தின்னிக் கழுகு போல - காலன்
உன் உயிரைப் பறித்ததனால்
இடிந்துபோனது அண்ணா எம் இதயம்
தீராத வேதனையால் தினம் தினம் தவிக்கின்றோம்
மாறாத சோகத்தில் நாற்பத்தைந்து நாள்கள் கழிந்தனவே
உயிர் உள்ளவரை எம்மை அன்புசெய்தாய்
எம் உயிர் உள்ளவரை உன்னை மறவோம்.

இவரது துயர் கேட்டு நேரில் கலந்துகொண்ட மற்றும் தொலைபேசியில் பகிர்ந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள். இன்று 12.03.2009 அண்ணாரின் தாயாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
தாய், சகோதரன் - கில்பேட் (பிரான்ஸ்)
சகோதரி -ஜெயமலர்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு.

## மரண அறிவித்தல்

### சாமுவேல் வரதராஜன்



(உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் வரதராஜன் 10.03.2009 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - கிரேஸ்பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சொர்ணலட்சுமியின் அன்புக் கணவரும் திருமங்கை, காலஞ்சென்ற வேநிலான் மற்றும் கிரிஜா, தணிகையான் (Ticketing Office, Wellawatta), கவிதாலயன் (மாணவன், தெகிவளை தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சீரளன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் நர்மதன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற வரதராணி மற்றும் தேவரட்ணம் (ஜெகன் பார்மஸி), சிறிதரன், தேவராணி, இரட்ணராணி காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் பத்மராஜன் , புஸ்பராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை பி.பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மான்ஸ் பாடசாலை வீதி,
உடுவில் வடக்கு, சுன்னாகம்.

தகவல்: திருமதி வரதராஜன்
சொர்ணலட்சுமி (மனைவி).

## மரண அறிவித்தல்



### தவில் வித்துவான்

### இராசரத்தினம் யசோதரன்

(ஆஸ்தான வித்துவான், அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

கைதடியைப் பிறப்பிடமாகவும் இல.64, A.V. றோட், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தவில் வித்துவான் இராசரத்தினம் யசோதரன் நேற்று (11.03.2009) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைதடியூர் தவில் வித்துவான் இராசரத்தினம் மற்றும் ஜானகி தம்பதியரின் புதல்வனும் அரியாலையூர் நாதஸ்வர வித்துவான் இராசமாணிக்கம் மற்றும் காலஞ்சென்ற மீனாட்சி தம்பதியரின் மருமகனும் பிறேமாவின் துணைவரும் அபிரா, நாதஸ்வர வித்துவான் நவரூபன் (கோபி), நாதஸ்வர வித்துவான் காண்டீபன் (யாழ்.பல்கலைக்கழக இறுதி வருட இசைத்துறை மாணவன்) ஆகியோரின் தந்தையும் குருசாமி (திருகோணமலை), கோகிலமணி, தர்மவதி (பிரான்ஸ்), சிவசாமி (கனடா), மஞ்சுளாதேவி, முருகதாஸ் (தவில் வித்துவான்) ஆகியோரின் சகோதரனும் மகேந்திரன் (நாதஸ்வரம்-கொழும்பு), கணேசமூர்த்தி (தவில்-தாவடி), பிறேமகலா, சாந்தி (கனடா), சியாமளதா (கொழும்பு) மற்றும் மாதவி (திருகோணமலை), மகேந்திரன் (சாவகச்சேரி), ஜெயக்குமார் (நாதஸ்வரம் - சங்கத்தானை), சிவனேஸ்வரி (கனடா), சிவசுப்பிரமணியம் (நாதஸ்வரம் -நல்லூர்), தனலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் ராணி, நாகபூசணி, முருகானந்தம் (தவில்-கோண்டாவில்), செல்வரத்தினம் (கனடா), இராஜேந்திரன் (கொழும்பு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64, A.V. றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 060 221 9468

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியத் திட்டத்தில் இணைய கால எல்லை நீடிப்பு

கோப்பாய்,மார்ச்12

அரச பொதுச்சேவையில் 23.08.1983 இற்கு முன்னர் நியமனம் பெற்ற பெண் ஊழியர்களை விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு 30.06.2009 வரை கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சலுகை மூலம் குறிப்பிட்ட உத்தியோகத்தர் இறந்திருந்தாலும் அவர்களது கணவர் இதற்கு விண்ணப்பித்துப் பயனைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றிய சுற்றறிக்கைகள் உரிய அரச அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(203-72)

## இரு சக்கர நாற்காலி அன்பளிப்பு

மந்திகை,மார்ச்12

போலியோ நோயினால் பாதிக்கப்பட்டிருந்த வரணியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான திருமதி பவிந்தினி றொபின் சனுக்கு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் இரு சக்கர நாற்காலியை அன்பளிப்புச் செய்துள்ளது.

அத்துடன் அக்குடும்பத்திற்கு உடுபுடைவைகள், உதவுதொகை என்பவற்றையும் லயன்ஸ் கழகம் வழங்கியுள்ளது.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பலர் இனம் காணப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு உதவிகள் வழங்க விரும்புபவர்கள் லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாமென லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சி.சரவணமுத்து அறிவித்துள்ளார்.

(203-218)

## மின் சீராக்கிகள் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு அண்மையில் கணனிகள் வழங்கப்பட்ட போதும் அவற்றிற்குரிய மின்சீராக்கிகள் (யுபிஎஸ்) வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வழங்கப்பட்ட கணனிகளை மாணவர்கள் பயன்படுத்தமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (203-207)

# தேசிய சேமிப்பு வங்கியின் பரு.கிளைக்கு விரைவில் சொந்தக் கட்டடம் அமைப்பு

மந்திகை,மார்ச்12

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்குச் சொந்தமாகக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைத் தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை நகரப் பகுதியில் இதற்கு இடம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இப்பகுதியில் காணியை விற்பனை செய்யவிரும்புவோர் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் தேசிய சேமிப்பு வங்கிக்கான சொந்தக் கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்ததும் அச்சுவேலியில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை திறந்துவைக்கப்படுமென்றும் அதற்கு முன்னர் வடமராட்சியில் நெல்லியடியில் தேசிய சேமிப்பு வங்கி தனியார் கட்டடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-218)

# அலுவலகங்களில் மணிக்கூடுகள் இல்லை அதிகாரிகளும் பொதுமக்களும் சிரமம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்.மாவட்ட அரச திணைக்கள அலுவலகங்களில் சுவர் மணிக்கூடுகள் எவையும் காணப்படுவதில்லை.

இதனால் இந்த அலுவலகங்களுக்குச் செல்லும் அதிகாரிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக மணிக்கூடுகளுக்குப் பயன்படுத்தும் பற்றரிகள் எடுத்துவரப்படுவதற்குத் தடை செய்யப்பட்டது. இதனால் அலுவலகங்களில் பொருத்தப்பட்டிருந்த மணிக்கூடுகள் செயலிழந்து காணப்பட்டன.

அண்மைக் காலமாக அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த மணிக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதால் தேவைகளுக்காக அலுவலகங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் நேரம் தெரியாமல் அவதிப்படுவதைக் காணமுடிகிறது.

(203-207)

# சுற்றாடல் விழிப்புணர்வுப் புகைப்படப் போட்டி

வேலணை,மார்ச்12

மத்திய சுற்றாடல் அதிகார சபை அகில இலங்கை ரீதியில் சுற்றாடல் விழிப்புணர்வு புகைப்படப் போட்டி நடத்தவுள்ளது.

'இலங்கையின் சுற்றாடல் வளர்ப்பு', 'பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுப் பொருள்களின் மீள்சுழற்சி பாவனையின் அழகு' எனும் இரு வெவ்வேறு தொனிப்பொருள் பிரிவுகளில் நான்கு பிரிவாகப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் பாடசாலை மாணவர், தனியார் திறந்த பிரிவு எனும் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் புகைப்படங்களுடன் 10 திறமையான புகைப்படங்களும் தெரிவுசெய்யப்பட்டுத் தேசிய மட்டத்துக்கு அனுப்பப்படும்.

தேசிய, மாகாண மட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குப் பெறுமதிமிக்க பணப்பரிசுகளும், 'தெரிவு செய்யப்படும் 10 திறமைசாலிகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேற்படி போட்டிக்கான புகைப்படங்கள் அடுத்தமாதம் 20ஆம் திகதிக்கு முன்பதாக சி.டி.பிரதி அல்லது டி.வி.டி. அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பமுடியும்.

படப்பிரதிகளை அனுப்புவதாயின் 'பிரதிப்பணிப்பாளர், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல.104, பரிசரபியச, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவ மாதிரிகளை வலயக் கல்வி அலுவலகங்கள், சுற்றாடல் அபிவிருத்தி அலுவலகம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (201-267)



சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினால் கிணறுகளுக்குக் குளோரின் இடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தனியார் கிணறு ஒன்றுக்கு றோட்டறிக் கழக உறுப்பினர்கள் குளோரின் இடும்போது எடுக்கப்பட்ட படம். *(படம்: நேசன்)*

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி,மார்ச்12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்னும் தலைப்பில் குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர் சைவப்புலவர் தி.திருமாறன் ஐயர் சொற்பொழிவாற்றுவார்.

(203-236)

## நல்லூர் பிரதேச செயலகத்தால் கலைஞர் விவரத்திரட்டு வெளியீடு

நல்லூர்,மார்ச்12

நல்லூர் பிரதேச செயலகம் தனது பகுதிக்குள் வாழும், மறைந்த கலைஞர்கள் குறித்த விவரத்திரட்டு ஒன்றை வெளியிடவுள்ளது.

குறித்த பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலைஞர்கள் தமது முழுப்பெயர், பிறந்த இடம், பிறந்த திகதி, நிரந்தர முகவரி, கிராம அலுவலர் பிரிவு, கலைத்துறைகள், கலைத்துறை சார்ந்த அனுபவங்கள், கலை சார்ந்த குடும்பப் பாரம்பரியம் ஆகிய விவரங்களை உள்ளடக்கியதான தகவல்கள் குறித்த விவரங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக மேற்படி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இறந்த கலைஞர்களாயின் அவர்களின் இறந்த திகதி, கலைசார்ந்த வாழ்க்கை வரலாறு போன்றவற்றை உறவினர்கள் வழங்கலாம் எனவும் விண்ணப்பத்துடன் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படத்தையும் இணைத்து அனுப்பவேண்டும் எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-111)

## புலமைப் பரிசில் பெறுவதற்கான குடும்ப வருமான எல்லை அதிகரிப்பு

கோப்பாய்,மார்ச்12

தரம் 5 புலமைப் பரிசில் கொடுப்பனவைப் பெறுவதற்கு இந்த ஆண்டு தொடக்கம் குடும்ப வருமான எல்லை 54 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 24 ஆயிரம் ரூபாவாக இது இருந்ததாகக் கூறப்பட்டது.

இதுதொடர்பான சுற்றறிக்கை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

## இதழியல் கற்கைக்கு கட்டணம் குறைப்பு

அச்சுவேலி,மார்ச்12

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான கட்டணம் 10ஆயிரம் ரூபாவால் குறைக்கப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியும் எதிர்வரும் 31வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதழியல் டிப்ளோமா முழு நேரக்கற்கை நெறிக்குக் கற்கைநெறிக் கட்டணம் 20 ஆயிரம் ரூபா உட்பட மொத்தக் கட்டணம் 22ஆயிரத்து 500 ரூபா என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கட்டணத்தில் கற்கைநெறிக்கான கட்டணம் 10ஆயிரம் ரூபாவால் குறைக்கப்பட்டு தற்போது மொத்தக் கட்டணம் 12ஆயிரத்து 500 ரூபா என பதிவாளர் அறிவித்துள்ளார். (203-11)

## நீர்வேலி ப.நோ.கூ.சங்கத்திற்கு மேலும் மூன்று கூட்டுறவு நகர்

கோப்பாய்,மார்ச்12

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் மேலும் மூன்று புதிய கூட்டுறவு நகர் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இருபாலை, நீர்வேலி, ஊரெழு ஆகிய பிரதேசங்களிலே இவை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் விற்பனைச் செயற்பாடுகள் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுடன் ஆரம்பமாகவுள்ளதாக நீர்வேலி ப.நோ.கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் உரும்பிராயில் ஒரு கூட்டுறவு நகர் முதன்முறையாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(203-72)

## குளங்கள் புனரமைப்பு

கோப்பாய்,மார்ச்12

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் குளம், கோப்பாய் மத்தி வேனைக்குளம் ஆகியன 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் புனரமைக்கப்படவுள்ளன.

கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனத்தினர், கமநல ஆணையாளர், பிரதேச செயலர், பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோரால் இந்தக் குளங்களைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்கான பூர்வாங்க மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குளங்களைச் சீர்செய்து தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-72)

# குடும்பச் சுமைகளைப் பிள்ளைகள் மீது திணிக்காது அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவவேண்டும்

## இலங்கை வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் கூறுகிறார்



யாழ்ப்பாணம்,மார்ச்12

குடும்பச் சுமைகளை பிள்ளைகள் மீது திணிக்காமல் அவர்களது எதிர்கால வாழ்வுக்கு அனைத்து சமூகத்தினரும் நியாக மனப்பாங்குடன் செயற்படவேண்டும்.

இலங்கை வங்கி வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் ந.சிவரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

சென்.அன்ரனீஸ் றோ.க. மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திருமதி செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பவனுக்கும்குறை உண்டு. கஞ்சிக்கு உப்பில்லை என்பவனுக்கும் குறையுண்டு. பாலில்லாமல் இருக்கலாம். கஞ்சி இல்லாமல் இருப்பது கடினமானது.

நமக்கு கீழ் இருப்பவர்கள் ஆயிரம் கோடி. இதை நினைத்துப் பார்த்து நிம்மதி கொள் என்பார்கள்.

அந்தவகையில் இன்று எமது மண்ணில் அதுவும் வன்னியில் பாடசாலைகளின் நிலையை எண்ணிப் பார்க்கமுடியாத துன்பியியல் நிகழ்வாகவே இருக்கிறது.

இங்கு கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்துகிறோம். வன்னி மண்ணில் கொத்துக் கொத்தாக மாணவச் செல்வங்கள் கொத்தணிக் குண்டுகளுக்குப் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த இழப்புகளை நாம் எப்படி ஈடு செய்யப்போகிறோமோ தெரியாது. இருந்தும் இம்மண்ணில் எமது ஒரே சொத்தான கல்வியை நாம் எமக்கு ஆதாரமான மூலதனமாக்கிக்கொள்ளவேண்டும்.

ஆசிரிய சமூகம் தமது குடும்பப் பிரச்சினைகளைப் பிள்ளைகள் மீது சுமத்தாது, அவர்களது எதிர்காலக் கல்விக்குத் தியாக மனப்பாங்குடன் செயற்படவேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சபைகள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்ற வேண்டும் - என்றார். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில்
### மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

**வினாத்தாள் - I** நேரம்: 45 நிமிடங்கள்

✱ **முதலில் தரப்பட்டுள்ள உருவப்பட்டத்துடன் மிகவும் பொருந்தக்கூடிய சொற்கள் அடங்கியுள்ள விடையின் கீழ் கோடிடுக.**

01.

1) மண், வெப்பம், நீராவி.
2) செம்பு, சூடு, அடுப்பு.
3) நீர், சூடு, நீராவி.

02.
1) வெப்பம், சுழல், மரம்.
2) மின்சாரம், கடினம், இரவு.
3) குளிர், மின்சாரம், சுழல்.


✱ **ஆரம்பச் சந்தர்ப்பத்திலிருந்து இறுதிச்சந்தர்ப்பம் வரை சரியாகக்காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.**

03.
1) நீராவி → மழை → மேகம் → நீர்
2) நீர் → மழை → நீராவி → மேகம்
3) மழை → நீர் → நீராவி → மேகம்

04.
1) செடி → மரம் → பூக்கள் → மகரந்த சேர்க்கை → காய் → விதை
2) விதை → காய் → பூக்கள் → மகரந்த சேர்க்கை → மரம் → செடி
3) செடி → பூக்கள் → மகரந்தசேர்க்கை → காய் → விதை → மரம்

✱ **இடைவெளியில் வரவேண்டிய மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

05.
1 - பெலிஜத், நுஹா, சிம்றா, சமா தோழிகளாவர்.
2 - ..................................................
3 - வார இறுதியில் ஒன்றுகூடுவர்.
4 - அன்று மாலையில் பூப்பந்து விளையாடுவர்.
5 - அதன் பின்னர் பாடங்களைப் பற்றி கலந்துரையாடுவர்.
1) தொலைக்காட்சி பார்ப்பர்.
2) வீணாக அரட்டை அடிப்பர்.
3) அவர்கள் மாடி வீடொன்றில் வாழ்வர்.

06.
1 - குத்தூஸ் ஓர் எழுதுவினைஞர் ஆவார்.
2 - ..................................................
3 - றியானா உணவு தயார் எனக் கூறினாள்.
4 - ..................................................
5 - றியானா தயிர் இருப்பதாகக் கூறியதும் குத்தூஸ் உணவுக்கு வந்தார்.
1) 2 - அலுவலகம் செல்ல ஆயத்தமானார், 4 - அவர் தயிர் சாப்பிட்டார்.
2) 2 - உணவை அலுவலகத்தில் சாப்பிடுவதாகக் கூறினார், 4 - அலுவலகம் செல்ல ஆயத்தமானார்.
3) 2 - அலுவலகம் செல்ல ஆயத்தமானார், 4 - உணவை அலுவலகத்தில் சாப்பிடுவதாகக் கூறினார்.

✱ **இடைவெளியில் வரவேண்டிய மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

07. நீர் நிலை → சூரிய வெப்பம் → .............................. → மழை மேகம் → மழை.
1) கடல். 2) நீராவி. 3) வானம்.

08. உழுதல் → விதைத்தல் → ...................... → பசளையிடல் → அறுவடை செய்தல்.
1) நாற்று நடல். 2) களை பிடுங்கல். 3) வரம்பு கட்டுதல்.

✱ **கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல்லின் அதே கருத்தைத் தரும் விடையின் கீழ்க்கோடிடுக.**

09. பிச்சை எடுத்துக்கொண்டிருந்த சிறுமியைக் கண்டதும் என் நெஞ்சம் உருகியது.
1) பொறுமை அடைந்தது. 2) கோபமடைந்தது. 3) கருணையடைந்தது.

10. நாங்கள் அவ்வேளையில் சிறிது நேரம் தடுமாறினோம்.
1) பயந்தோம். 2) பொறுமையை இழந்தோம். 3) களைப்பாறினோம்.

✱ **பின்வரும் தகவல்களைக்கொண்டு மிகச்சரியான விடையினைத் தெரிந்து கோடிடுக.**

| | |
|---|---|
| பேனை - 2<br>பென்சில் - 2 | பேனை - 6<br>பென்சில் - 4 |
| ரூபா 24 | ரூபா 61 |

11. பேனை ஒன்றின் விலை எவ்வளவு?
1) ரூ. 5.50 2) ரூ. 6.50 3) ரூ. 11.00
4) ரூ. 13.00

12. பென்சில் 2 இன் விலை என்ன?
1) ரூ. 5.50 2) ரூ. 11.00 3) ரூ. 13.00
4) ரூ. 6.50

✱ **மாலைநேரத்தில் நீர் காணக்கூடிய அம்சங்களைத் தெரிவு செய்து எழுதுக.**
1) வானம் இருண்டு காணப்படும்.
2) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வர்.
3). கடற்கரையில் மக்கள் உலாவித்திரிவர்.
4) சூரியன் உதயமாகும்.
5) உழவர்கள் தமதில்லம் நோக்கிச்செல்வர்.

13. ..................................................

14. ..................................................

✱ **தரப்பட்டுள்ள பாடலைக்கொண்டு விடையளிக்குக.**

*தலை வாரிப் பூச்சூடி உன்னைப் பாட*
*சாலைக்குப் போ என்று சொன்னார் உன் அன்னை*
*சிலைபோல ஏனங்கு நின்றாய் - நீ*
*சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்.*


-பாரதிதாசன்-

15. தலை வாருதல் என்றால் என்ன?
1) தலையை அசைத்தல். 2) தலை கட்டுதல். 3) தலை சீவுதல்.

16. சிந்துகின்றாய் என்பது உணர்த்தும் காலம் எது?
..................................................

✱ **எண் கோலத்தை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.**


17. 1, 2, 4, 7, ................

18.



✱ **தரப்படும் உருவை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.**

19.

இவ்வுருவில் எத்தனை முக்கோணங்களை அடையாளம் காணலாம்?
1) 16 2) 17
3) 18 4) 19

20. இவ்வுருவிலிருந்து பெறக்கூடிய சதுரங்கள்,
1) 8 2) 11
3) 15 4) 16


✱ **தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.**
(குறிப்பிட்ட விளையாட்டை விரும்புவோர் பற்றிய தரவுகள்)

1 - அதிக விருப்பம்.
2 - ஓரளவு விருப்பம்.
3 - விருப்பமின்மை


| | ரேகா | ஜனதன் | சிம்தான் | அஸின் | பஸ்லின் |
|---|---|---|---|---|---|
| கிரிக்கெட் | 3 | 2 | 1 | 2 | 1 |
| கால்பந்து | 1 | 2 | 1 | 1 | 1 |
| கரப்பந்து | 3 | 2 | 2 | 2 | 1 |
| வலைப்பந்து | 2 | 3 | 2 | 3 | 2 |
| டெனிஸ் | 2 | 2 | 3 | 1 | 1 |

21. அதிகமானோர் விரும்பும் விளையாட்டு எது?
1) வலைப்பந்து. 2) கால்பந்து. 3) கிரிக்கெட்.

22. விளையாட்டுக்களில் அதிக நாட்டத்தைக் கொண்டிருப்பவர் யார்?
1) ரேகா. 2) ஜனதன். 3) பஸ்லின்.


✱ **மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


23. மு.ப 11.15 மணிக்கு வேலை ஒன்றை தொடங்கிய பின் அவ் வேலையை பாத்திமா ந.ப 12.00 மணிக்கும், ரதி பி.ப 1.05 மணிக்கும், நயன்தாரா பி.ப 13.00 மணிக்கும் முடித்தனர். இவர்களில் குறிப்பிட்ட வேலைக்காக அதிக நேரம் எடுத்தவர்,
1) பாத்திமா. 2) ரதி. 3) நயன்தாரா.


24. பின்வரும் உருவில் → இனால் காட்டப்பட்டுள்ள அட்டைக்குரிய எண்ணின் கீழ்க்கோடிடுக.


1) 3 2) 8 3) 2 4) 5

✱ **மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

25.



26.



27. இதன் சுற்றளவு,
1) 36cm
2) 12cm
3) 24cm
1cm
1cm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்வி நிர்வாக, கல்வி அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளர் செல்வ.உதயகுமார் உரையாற்றுவதையும், திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவதையும் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (50-218)

## மீசாலை ஸ்ரீ விநாயகா வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், மார்ச்.12

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மீசாலை ஸ்ரீ விநாயகா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மட்டுவில் மோகனதாஸ் வி.க.மைதானத்தில் 7 பேர் கொண்ட 10 பந்து பரிமாற்றங்களுடனான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டன.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட மீசாலை ஸ்ரீ விநாயகா விளையாட்டுக் கழகம் கைதடி குமரன் விளையாட்டுக் கழக அணியினை 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திச் சம்பியனாகியது. (50-207)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி வடக்கு, மார்ச்.12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் 15, 17, 19 வயதுப் பிரிவின் அணிகள் பங்குபற்றவுள்ளன. (50-86)

* * *

நல்லூர், மார்ச்.12

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்கிழமை நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வுகள் காலநிலை சீரின்மையால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (50-111)

## தெல்லிப்பளைக் கோட்டக் கரப்பந்தாட்டம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் சம்பியன்

வலி.வடக்கு,மார்ச் 12

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் கோட்டச் சம்பியனாகியது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அருணாசலம் வித்தியாலயமும், அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்ற அணி சளைத்ததல்ல என்பதை முதல் இரு சுற்றுக்களிலும் நிரூபித்த போதிலும் மூன்றாம் சுற்றில் அருணோதயாக் கல்லூரி பின்னடைவைச் சந்தித்தது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் முதலாம், மூன்றாம் சுற்றுக்களை அருணாசலம் வித்தியாலயம் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

அருணாசலம் வித்தியாலயம் முதலாம், மூன்றாம் சுற்றுக்களை முறையே 25:22, 25:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற அருணோதயாக் கல்லூரி இரண்டாம் சுற்றை மட்டும் 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் பெற்றது.

மூன்றாம் இடத்தைத் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (50-86)

## நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி முடிவுகள்

நல்லூர், மார்ச்.12

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களின் விவரங்கள் வருமாறு:-

எல்லே - ஆண்கள்

*1 ஆம் இடம்* - திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய மகா வித்தியாலயம்.

*2 ஆம் இடம்* - கொக்குவில் கே.சி.சி. விளையாட்டுக் கழகம்.

*3 ஆம் இடம்* - அரியாலை காந்தி விளையாட்டுக் கழகம்.

எல்லே - பெண்கள்

*1 ஆம் இடம்* - கொக்குவில் கே.சி.சி. விளையாட்டுக் கழகம்.

*2 ஆம் இடம்* - அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

கபடி - பெண்கள்

*1 ஆம் இடம்* - அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

*2 ஆம் இடம்* - கொக்குவில் கே.சி.சி. விளையாட்டுக் கழகம்.

வலைப்பந்தாட்டம்

*1 ஆம் இடம்* - கொக்குவில் கே.சி.சி. விளையாட்டுக் கழகம்.

*2 ஆம் இடம்* - அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

*3 ஆம் இடம்* - அரியாலை ஸ்ரீகலைமகள் விளையாட்டுக் கழகம். (50 - 111)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## மானிப்பாய் மகளிர் கல்லூரி கரப்பந்தாட்டத்தில் வென்றது

வலி.வடக்கு, மார்ச்.12

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி கோட்டச் சம்பியனாகியது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிய போதிலும் மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் வெற்றிகொண்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

முதல் இரண்டு நேர் சுற்றுக்களை மானிப்பாய் மகளிர் கல்லூரி முறையே 27:25, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுக் கோட்டச் சம்பியனாகியது. (50-86)

## பாடசாலை மாணவர்களிடையே கரம் விளையாட்டு அறிமுகம்

வலி வடக்கு, மார்ச்.12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே முதல் தடவையாக ஆண்கள், பெண்களுக்கான கரம் விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள் அணிகளின் 15 வயது, 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இப் போட்டி நடைபெறவுள்ளது. இதேபோன்று யாழ்.மாவட்டத்தின் ஏனைய கல்வி வலயங்களிலும் இப் போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட மட்டத்திலும் இப் போட்டி நடைபெறவுள்ளது.

மைதானங்கள் இல்லாமை, பொருளாதார நிலை, மாணவர்களின் எண்ணிக்கை குறைவு போன்ற காரணங்களினால் ஏனைய போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத பாடசாலை மாணவர்களுக்கு கரம் விளையாட்டில் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கல்விவலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஒருவர் கருத்துக் கூறியுள்ளார். (50-86)



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவு மாவட்ட மட்டத்தில் நடத்திய ஆண்களுக்கான 'ஹொக்கி'ப் போட்டியில் வெற்றியீட்டிய வட்டுக்கோட்டை 'ஓல்ட் கோல்ட்' விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வீரர்கள், விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத் துறைப் பதில் பணிப்பாளர் க.கணேசநாதன் ஆகியோ[illegible] படத்தில் காணலாம். (படம்:தேவன்)

## தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் கரப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆண், பெண் பிரிவு கரப்பந்து அணிகளுக்கான போட்டிகள் அண்மையில் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.மைதானத்தில் நடைபெற்றன.

போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

15 வயது - பெண்கள்

*1 ஆம் இடம்* - மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை.

*2 ஆம் இடம்* - கச்சாய் அ.த.க.பாடசாலை.

17 வயது - பெண்கள்

*1 ஆம் இடம்* - கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை.

*2 ஆம் இடம்* - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

19 வயது - பெண்கள்

*1 ஆம் இடம்* - கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை.

*2 ஆம் இடம்* - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

15 வயது - ஆண்கள்

*1 ஆம் இடம்* - கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

*2 ஆம் இடம்* - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

17 வயது - ஆண்கள்

*1 ஆம் இடம்* - கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

*2 ஆம் இடம்* - மீசாலை வீரசிங்கம் ம.வி.

19 வயது - ஆண்கள்

*1 ஆம் இடம்* - மீசாலை வீரசிங்கம் ம.வி.

*2 ஆம் இடம்* - சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (50-207)

## மெய்வன்மைப் போட்டி

வேலணை, மார்ச்.12

எழுவைதீவு முருகவேள் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் து.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நேற்று முன்தினம் நடைபெறவிருந்த இப் போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-267)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இலங்கையில் இயந்திர வாகனங்கள் பரவலடைய முன்னர் மனிதர்களை வண்டியில் வைத்து மனிதர்களே இழுக்கும் 'ரிக்ஷா' வண்டியின் பாவனை அதிகளவில் இருந்தது. இயந்திர வண்டிகள், சைக்கிள் என்பவற்றின் அறிமுகத்தோடு ரிக்ஷோவை மனிதர்கள் இழுக்கும் முறை மறைந்தது. மனிதர்களுக்குப் பதில் சைக்கிள்கள் அவற்றில் பொருத்தப்பட்டன.

இயந்திர வண்டிகளின் பாவனைகள் நிறைந்துள்ள இக் காலத்தில் சைக்கிள் ரிக்ஷாக்களைக் காண்பதும் அபூர்வமாகிவிட்டது. இன்றும் சைக்கிள் ரிக்ஷாவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் அத்தியடியைச் சேர்ந்த ரட்ணம் ஐயம்பிள்ளை (வயது 61) என்ற முதியவரைப் படத்தில் காணலாம். 1990 ஆம் ஆண்டிலிருந்து இவர் ரிக்ஷாவை ஓட்டி வருகின்றார்.

*(படமும் தகவலும்: காந்தன்)*



என்னடா இது? ஏதேனும் ஓவியமா என்று நினைத்தால் அது தவறு. சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் 'நிஷா' புயலின் போது வேருடன் சாய்ந்த மரம் அறுக்கப்பட்ட நிலையில் இருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

ஆனால் இதனைப் பார்த்த ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். சிலந்தி போலவும், ஓவியம் போலவும், பயங்கரமான முகம் போலவும் இது தென்படுவதாக அவர்கள் கூறி வருகின்றனர்.

*(படமும் தகவலும்:-கிருஷ்ணன்)*

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்






தொகுப்பு: இரணியன்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற வெள்ளி விழாவை முன்னிட்டு நிறுவப்பட்ட மகாத்மா காந்தி அவர்களின் உருவச்சிலைதான் இது.

பொது நிர்வாக உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள், நிதி அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா அவர்களால் 07.07.1974 அன்று இந்தச்சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது. இந்தச் சிலையினை மில்க்வைற் தொழிலகம் அன்பளிப்புச் செய்திருந்தது. போரினால் பலமுறை பாதிப்புற்றும், செப்பனிடப்பட்டு, யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நின்று கொண்டிருக்கிறார் இந்த அகிம்சைவாதி!

யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற இளைப்பாற்று மடங்களில் ஒன்றான வயற்கரை மடமே இது! வட்டுக்கோட்டை வழுக்கையாற்றுப் பகுதியில் 1920-25 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இது அமைக்கப்பட்டது. வயலில் வேலை செய்பவர்கள் இளைப்பாறுவதற்கும், உணவருந்துவதற்கும், நீரருந்துவதற்கும், வீதியால் செல்பவர்கள் இளைப்பாறுவதற்கும் இந்தமடம் உதவுகின்றது. கொங்கிறீற்றினால் தட்டைக் கூரையிடப்பட்டுள்ள இந்த இளைப்பாற்று மடம் கோடை காலத்தில் மிகுந்த பயன்பாடுடையதாக இன்றும் விளங்குகின்றது.

(படமும், தகவலும்:- சோ.குமுதா)





இயந்திரங்களின் பாவனை அறியப்பட முன்னரே, தாவர வித்துக்களில் இருந்து எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு எம் முன்னோர் பயன்படுத்திய பொறி முறையே 'செக்கு'. முற்றுமுழுதாக மரத்தினால் செய்யப்பட்ட செக்கினை இயக்குவதற்கு மாடுகள் பயன்படுத்தப்பட்டன. முன்னைய காலங்களில் குற்றம் புரிந்தவர்களை மாடுகளுக்குப் பதிலாகச் செக்கிழுக்க வைப்பது ஒரு தண்டனை முறையாக இருந்துள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் ஆக்கிரமிப்பால் 'செக்கு' என்ற சாதனமே செத்தழியும் நிலைக்குச் சென்றுவிட்டது. எஞ்சியுள்ள சில செக்குகளில் மாடுகளுக்குப் பதிலாக 'லான்ட்மாஸ்ரர்' இயந்திரம் பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (படமும் தகவலும்:-எஸ்.ஸ்ரீகுமரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் பெட்டகம்



# சுவாசத்தின் போது நூறு வீத தூய ஒட்சிசன் அபாயமானது



தொகுப்பு:
எஸ்.பேராசிரியன்.

வளிமண்டலத்தில் ஒட்சிசன் இல்லாது போனால் மனிதகுலம் மட்டுமல்ல, எந்த உயிரினமுமே உயிர் வாழ்தல் அரிது என்பது உங்களுக்குத் தெரியும். வளியில் 20 வீதம் ஒட்சிசன் மட்டும் உண்டு. இருப்பினும் நூறு வீத தூய ஒட்சிசனை நாங்கள் சுவாசித்தால் உயிராபத்து நேரலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? சாதாரணமாக மத்திய வயது நபரொருவர் நிமிடத்திற்கு 7 தொடக்கம் 8 லீற்றர் வரை வளியை உட் சுவாசிக்கிறார். அந்த வளியில் 20 வீத ஒட்சிசன் அடங்கியிருக்கிறது. அதேவேளை சுவாசிக்கும் காற்றில் 15 வீத ஒட்சிசன் இருக்கின்றது. எனவே ஒவ்வொரு தடவையயும் சுவாசிக்குமம் வேளை 5 வீத ஒட்சிசன் உபயோகப்படுத்தப்பட்டு காபனீரொட்சைட்டாக மாற்றமடைகிறது. நாங்கள் சுவாசிப்பதற்கு முக்கியமாக ஒட்சிசன் தேவையாயினும், நூறு வீத தூய ஒட்சிசனை உட்சுவாசிப்பது, "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பதற்கேற்ப ஆபத்தாக முடியலாம். நுரையீரலை நாங்கள் சற்று ஆழமாக நோக்கினால் , காற்று உட்செல்லும் போது, நுண் குழாய்களில் ஒட்சிசன் குருதியுடன் சேர்கிறது. அதேவேளை குருதியிலுள்ள காபனீரொட்சைட் வெளியேறுகிறது. சாதாரண அமுக்க வெப்பநிலையில் நூறு வீத தூய ஒட்சிசனைப் பன்றிகளுக்கு 48 மணித்தியாலங்கள் கொடுத்துப் பரீட்சிக்கப்பட்ட வேளையில், அவற்றின் நுரையீரலில் அதிகளவு திரவம் சேர்வது அவதானிக்கப்பட்டது. மேலும் அவற்றின் நுண்குழாய்கள் பெரிதும் பாதிப்படைந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. ஒட்சிசன் மூலக்கூறுகளிலுள்ள மிகவும் தாக்கமுடையவல்ல ஒட்சிசன் சுயாதீன மூலிகம் எபிதலியல் கலத்தின் புரத்திரனையும் சவ்வுகளையும் அழியச் செய்திருந்தது. இதேபோல மனித இனத்திலும் நூறு வீத தூய ஒட்சிசன், சுவாச நோய்கள், நெஞ்சு வலி, பார்வை இழத்தல், மயக்கம் முதலிய நோய்களை ஏற்படுத்தும் சாத்தியமுண்டு. எனவே நாம் நூறு வீத தூய ஒட்சிசனைச் சுவாசிக்க கூடாது.

# மின்சாரம் எப்போது பாவனைக்கு வந்தது?

மின்சாரம் இன்றி வாழ்வதென்பது இன்று நாம் நினைத்துப் பார்க்க முடியாத விடயம். ஆனால் மின்சாரத்தை மனிதன் பயன்படுத்துவதற்கு 1800 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் ஆரம்பித்தான். 1800 ஆம் ஆண்டு அலெொபான் டரோ வோல்டா என்பவர் முதலாவது மின்கலத்தை (பற்றறி-Battery) கண்டுபிடித்தார். அவர்தான் மின்சாரத்தைத் தொடராகப் பெறுவதற்கான வழியை உருவாக்கியவர். பின்னர் மின்சாரத்தைக்கொண்டு வெப்பத்தை உருவாக்கலாம். வெளிச்சம் ஏற்படுத்தலாம். இரசாயணச் செயற்பாடுகள் மற்றும் காந்த விளைவுகளையெல்லாம் உருவாக்க முடியும் என்பது கண்டுபடிக்கப்பட்டன.

மின்சாரம் தொடர்ச்சியாகப் பாய்ந்து கொண்டிருக்கும் ஒரு சக்தி என்ற வோல்டாவின் கண்டுபிடிப்பானது முன்னேற்ற நகர்வில் மனிதனின் மாபெரும் கால் தடமாகும். வோல்டாவின் கண்டுபடிப்பு மின்சார பாவனையில் பல்வேறு முன்னேற்றங்களை ஏற்படுத்தியது.

ஒரு கலவை நிலையில் பல பொருள்களைப் பிரித்து எடுப்பதற்கு மின்சாரம் பயன்படும் என்பதை சேர் ஹம்ப்ரி டேவி என்பவர் கண்டுபிடித்தார். இந்த ஆராய்ச்சிகளின் பயனாகவே மலிவான அலுமினியம், சுத்தமான செம்பு, குளோரின் பல்வேறு அமிலங்கள் மற்றும் உரங்கள், சிறப்பான எஃகு போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் மின் ஓட்டத்தின் மூலம் காந்தத்தை உருவாக்க முடியும் என்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் இந்தச் செயற்பாட்டை எதிர்மறையாக நிகழ்த்துவதின் மூலம் காந்தத்தை நகர்த்தி மின்சாரத்தை உருவாக்க முடியும் என்று 'மைக்கள் பறடே' கண்டுபிடித்தார். இதன் வளர்ச்சிநிலைதான் டைனமோ மற்றும் ரான்ஸ் போமர்களின் கண்டுபிடிப்பு.

ஆகவே, மின்சாரத்தை நடைமுறைப் பாவனைக்குப் பயன்படுத்த ஆரம்பித்தமை வெகு அண்மைக் காலத்தில்தான் என்று அறிகிறோம். இத்துறையில் தொடர்ந்து கண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

## ஆகாயத்தில் பிறந்த குழந்தை!

அதிஷ்ட குழந்தைகள் பிறக்கும்போது ஆகாயத்திலிருக்கும் தேவர்கள் பூமாரி பொழிந்து ஆசீர்வதிப்பார்கள் என்ற நம்பிக்கை பொதுவாக எல்லோரிடத்திலும் உள்ளது. ஆனால் அவுஸ்திரேலியாவில் இந்தியப் பெண்மணி ஒருவருக்கு ஆகாயத்திலே குழந்தை பிறந்திருக்கிறதாம். விமானம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த பஞ்சாப்பைச் சேர்ந்த பரம்ஜித்கவுர் என்ற பெண்மணிக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டு விட்டதாம். அந்த நேரத்தில் அதில் பயணம் செய்துகொண்டிருந்தவர்கள் பிரசவத்தைக் கவனித்திருக்கிறார்கள். அந்தப் பெண்மணிக்கு அழகான ஆண் குழந்தையொன்று அந்த விமானத்திலே பிறந்ததாம். டார்வின் விமான நிலையத்தில் விமானத்தை உடனடியாக தரையிறக்கி குழந்தையையும் தாயினையும் மருத்துவமனையில் சேர்த்து விட்டார்களாம்.

கவி,
யாழ்ப்பாணம்.

## மீனின் வயிற்றுக்குள் "செல்போன்"





கலையரசன்,
சண்டிலிப்பாய்.

சகுந்தலை காலத்தில் மீன் வயிற்றுக்குள் மோதிரம் இருந்ததை அறிந்திருந்தோமல்லவா..? இன்றைய நவீன காலத்தில் மீன்கள் எதையோயெல்லாம் தமது உணவாக எண்ணி விழுங்கத் தொடங்கிவிட்டது. மீன்களுக்கும் நாகரீகம் பிடிபடத் தொடங்கியிட்டுது என்று நினைக்கத் தோன்றுகிறது. எப்படித் தெரியுமா? பிரிட்டன் நாட்டில் 'ஆன்ட்ரு' என்பவர் கடலில் குளித்துக் கொண்டிருந்த சமயம் அவரது "செல்போன்" தவறிவிட்டது. இதனால் ஆன்ட்ரு கவலையுற்றிருந்த போது, அவரது மீனவ நண்பன் ஆன்ட்ருவுடம் செல்போனில் தொடர்பு கொண்டு நான் பிடித்த மீன் ஒன்றுக்குள் உமது செல்போன் இருப்பதைக் கண்டு பிடித்துள்ளேன். மீனை வெட்டிப் பார்த்தபோது அது உம்முடைய செல்போன் என்பதை உமது இலக்கத்தின் ஊடாக அறிந்து கொண்டேன் என்று தகவல் சொன்னதும் ஆன்ட்ருவுக்குத் தனது செல்போன் கிடைத்து விட்டதே என்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

இதில் எங்களுக்கு வியப்பு என்னவென்றால் செல்போன் காணாமல் போய் மூன்று நாள்களாகி மீனின் வயிற்றுக்குள் இருந்துள்ளபோதும் மீனை வெட்டி செல்போனை வெளியே எடுத்தபோது செல்போன் பழுதுபடாமல் இயங்கும் நிலையில் இருந்ததாம்.

## புதன் பொய்கை

### மரணம்

என்றோ
ஒருநாள்
இதுவும்
நிச்சயம்
முடிவில்லா
தொடக்கத்தின்
ஆரம்ப பூஜ்ஜியம்.

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

### எதிர்பார்ப்பு

முடிவின்றித் தொடரும்
நம்......
அலைகளிற்குத் தினமும்
வேண்டி நிற்கின்றோம்
ஓர் முற்றுப்புள்ளி......

மகே மேனன்,
கொற்றையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலய பவளவிழா, அதிபர் கு.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பழைய மாணவரும் கடற்றொழில் தகராறு சபை பதிவாளருமாகிய ஆ.சிவதாசன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் பழைய மாணவியும் வைத்திய கலாநிதியுமான திருமதி ச. அருமைநாயகம் மற்றும் விருந்தினர்கள் ஆலயத்தில் இருந்து விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை, மற்றும் கலைநிகழ்வுகளை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: நேசன்)

## கற்பகம் விற்பனை நிலையம் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் கற்பகம் விற்பனை நிலையம் நெல்லியடி நகர்ப் பகுதியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த அபிவிருத்திச் சபை இதற்குரிய கட்டடத்தைப் பெற்றுக் கொள்வதில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(204-236)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் வேலுப்பிள்ளை சிவஞானம்**

(பண்ணிசைப் புலவர்)

எமது கல்லூரி ஆசிரியை திருமதி சிவகலா சண்முகராசா அவர்களின் அன்புத் தந்தையின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி/557473)

## மரண அறிவித்தல்



**திருமதி லில்லிமேரி வேதராசா**

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் இல.18, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லில்லிமேரி வேதராசா அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை வேதராசாவின் (முன்னாள் ஒப்புநோக்குநர் உதயன்) அன்பு மனைவியும் அகஸ்ரின் ஜீவரெட்ணம் (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தாயும் மேரிறீற்றாவின் அன்பு மாமியும் மேரி யோசேப்பின், அந்தோனியாப்பிள்ளை, மேரிமாகிறற், எலிசபேத் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்ரர் (ஜெயம்) எலிசபேத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (12.03.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி வீதியிலுள்ள 67ஆம் இலக்க இல்லத்திலிருந்து யா/புனித அடைக்கலநாயகி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (83441)

தகவல்:
திருமதி லில்லிமேரி யோசப் [பேறாமகள்].

## நீங்கா நினைவில் ஓராண்டு...





மலர்வு: 13.04.1917 உதிர்வு: 14.12.2007

அமரர் திதி:-சதுர்த்தி
**சிதம்பரப்பிள்ளை ஆனந்தநடராஜா**

மலர்வு: 20.10.1920 உதிர்வு: 23.02.2008

அமரர் திதி:- துதியை
**ஆனந்தநடராஜா மகேஸ்வரி**

அன்பாக எமை அரவணைத்து பண்புடன் வாழ வழிகாட்டி
எங்களை வாழ வைத்த தெய்வங்களே! எங்கு சென்றீர்கள் எம்மை விட்டு
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் ஒரு போதும் எம்மைவிட்டு நீங்காது
எப்போது காண்போம் உங்கள் திருமுகத்தை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீரை வளவு,
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


## STUDY IN INDIA

GARDEN CITY COLLEGE

BANGALORE UNIVERSITY DEGREES

*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK*

**Courses Offered**

| | |
|---|---|
| BCA | Bachelor of Computer Application |
| B.Sc. | Computer Science/Microbiology/ Genetics Biotechnology/Fashion and Apparel Design |
| B.A. | Journalism/B.Com Computers |
| BBM | Bachelor of Business Management |
| BHM | Bachelor Of Hotel Management |
| BPT | Bachelor of Physiotherapy |
| LAW | Bachelor of Law |

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

www.studyingcc.com

தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.


## வலி.கிழக்குப் பிரதேசத்தில் மழையால் பயிர்கள் அழிவு

கோப்பாய், மார்ச் 12

நீண்ட வறட்சியின் பின்பு பெய்த கடும் மழை யினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பயிர்கள் பலவும் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அறுவடைக்குத் தயாராக இருந்த வெங்காயம், உருளைக்கிழங்கு, கோவா போன்ற பயிர்களே பெருமளவு சேதத்திற்குள்ளாகி உள்ளதென விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அறுவடை முடிந்து ஒழுங்குபடுத்தாமல் இருந்த வைக்கோலும் அழிவடைந்துள்ளாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(203-72)

## மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் இந்தாண்டின் முதலாம் அரையாண்டுக்கானமீள்பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு நிறுவணப் பணிப்பாளர் க. கதிர்மலை அறிவித்துள்ளார். (201)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வித்துவான்
**கந்தசாமி குகதாசன்**
(ஓய்வு பெற்ற வட்டாரக்கல்வி அதிகாரி)

தோற்றம்: 17.04.1925
மறைவு: 18.02.2003
திதி: துதியை (12.03.2009)

அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன்
இறைவனை மன்றாடுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்.

நயினாதீவு. (83123) குடும்பத்தினர்.

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
14 . 02 . 1936



விண்ணில்
23 . 02 . 1997

**அமரர் முத்து நடராஜா**

திதி: பிரதமை

அப்பா!
ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும்
ஆழமாய் பதிந்துள்ளது உங்கள் நினைவு
ஆல்மரமாய் நின்றீர்கள் எமக்கு
அது போல் என்றென்றும் எமக்கு
வழிகாட்டியாய் இருங்கள் அப்பா!

உங்கள் நினைவோடு வாழும்:
*மனைவி:* கமலாதேவி,
*பிள்ளைகள்:* சிறிரஞ்சினி, கமலராஜன், யோகராஜன், ஜீவறஞ்சினி, ராஜராஜன்.
*மருமக்கள்:* வாசகன், அனுராதா, மாலதி, பரம்குமார்,
*பேரப்பிள்ளைகள்:* கீரன், கிருபன், சேரினா, அருண், அபிஷ்னா, ஆருஷ், ஹாஷினி.

விநாயகர் பாடசாலை அருகில்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (82987)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 . 11 . 1949



மறைவு
10 . 02 . 2009

**திருமதி முத்துக்குமாரு கமலாதேவி**

கடந்த 10.02.2009 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


முத்துக்குமாரு மோகனகுமார்,
பெரிய மதவடி, சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(83294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பரப்பளவில் கூடிய உரு.




1) A 2) B 3) C 4) B, C

**✱ மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

29. ஹனானா நின்ற வரிசையில் அவளுக்கு முன்னால் 8 பேரும் பின்னால் 5 பேரும் நின்றனர் எனின், அவ்வரிசையில் நின்றோர்,
1) 13 2) 9 3) 14 4) 12


30. சென்ற வருடம் (2007இல்) மார்ச் மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை தனது 10 ஆவது பிறந்த தினத்தை சின்பா கொண்டாடினாள். அவள் தனது 11 ஆவது பிறந்த தினத்தை என்ன கிழமை கொண்டாடுவாள்?
1) ஞாயிறு. 2) திங்கள். 3) வெள்ளி.

31. புறா ஒன்றின் இயல்புகளை உள்ளடக்கிய விடை,
1) நடத்தல், சிரித்தல், தூங்குதல், பாலூட்டுதல்.
2) பறத்தல், கூடுகட்டல், முட்டையிடல், உண்ணல்.
3) திருடுதல், துள்ளல், குதித்தல், குறுகுறுத்தல்.

32. ஒரு பொதியில் 42 எள்ளுருண்டைகளும் இன்னொரு பொதியில் 24 எள்ளுருண்டைகளும் உள்ளன. இரு பொதிகளையும் சமப்படுத்த வேண்டுமானால், கூடுதலாக உள்ள பொதியில் இருந்து குறைவாக உள்ள பொதிக்கு எத்தனை எள்ளு உருண்டைகளைப் போடவேண்டும்?
1) 9 2) 33 3) 6 4) 18

**✱ வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

33.





1)


2)


3)

34.



1) 2) 3)

35. மு.ப 9.00 மணியைக்காட்டும் கடிகார முட்களின் மணி முள் பி.ப 3.00 ஐ காட்ட வட்டவடிவக்கடிகார முகத்தின் என்ன பங்கைக் கடக்கவேண்டும்?
1) 1/4 2) 1/2 3) 3/4 4) 2/8

36. பி.ப 3.00 மணியைக்காட்டும் கடிகாரம் பழுதடைந்து விட்டது. அது சரியாக திருத்தப்படும் வரை ஒரு நாளில் எத்தனை தடவை சரியான நேரத்தைக் காட்டும்?
1) 1 2) 2 3) 12 4) 3

37. அடைப்பினுள் உள்ள எழுத்துக்களில் 5 எழுத்தினைக்கொண்டு ஒரு பறவையின் பெயரை எழுத முடியும். அதனைக் கண்டு பிடித்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீ | கா | பு | ழி | றா | |
| கோ | ங் | னா | | க | ம் |

........................................

38. அடைப்பினுள் உள்ள ஆறு எழுத்துக்களைக்கொண்டு எமது நாட்டின் புராதன நகர் ஒன்றின் பெயரை அடையாளம் காண முடியும். அதனைக் கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வை | ன | பொ | ல | ப | | று |
| சி | ன் | ம | க | த | ட | |

........................................

39. பஞ்சன் ராகுவிலும் வயதிற் கூடியவன். ஆனால், காந்தியிலும் இளையவன் எனின், ராகு காந்தியிலும்,
1) வயதிற் கூடியவன். 2) வயதிற் குறைந்தவன்.
3) சமவயது உடையவன். 4) கூறமுடியாது.

40. பாலனும் சுந்தரனும் வரலாறு படிக்க விரும்புவோர். சுந்தரனும் வரனும் புவியியல் படிக்க விரும்புவோர். வரனும் பாலனும் கணிதம் படிக்க விரும்புவோர் எனின், வரலாறு, புவியியல் ஆகிய இரு பாடங்களும் படிக்க விரும்புபவர் யார்?
1) வரன். 2) பாலன். 3) சுந்தரன்.



கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்குப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் பசுப்பால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரி வி.அம்பலவாணர் மாணவர்களுக்குப் பசுப்பால் வழங்குகிறார். படத்தில் இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் காணப்படுகின்றார். *(236)*



சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையினால் மாணவர்களுக்கான சிசு உதான சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

நிகழ்வுக்கு வருகை தந்த சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் க.சண்முகலிங்கம் மற்றும் உத்தியோகத்தர்களை வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். *(207)*




சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய உழவர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் பொங்கலை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம் *(59)*



மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய பரிசளிப்பு விழாவும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலை அதிபர் எம்.ஆனந்தகுமார் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் மற்றும் அதிபர், ஆசிரியர்களுடன் ஏனைய விருந்தினர்களையும் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கலாபூஷணம் விருதுபெற்ற கலைஞர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப் பட்ட படங்கள்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நாட்டுக்கூத்துக் கலைஞர் ந.புவனசுந்தரத்திற்கு விருது வழங்குவதையும், யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஓவியக் கலைஞர் த.யோகநாதனுக்கு விருது வழங்குவதையும் முதல் இரண்டு படங்களில் காணலாம்.

சங்கீதத்துக்கான விருதை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் செல்வி சரோஜா தம்புவுக்கு வழங்குவதையும், நாதஸ்வரக் கலைஞர் செ. சிவசாமிக்கு கலாசாரப் பேரவைப் உறுப்பினர் எஸ். இராமலிங்கம் விருது வழங்வதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களை இறுதிப் படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# வன்னியில் காயமுற்றோருக்கு உதவ இந்திய மருத்துவர்கள் குழு வருகை

கொழும்பு, மார்ச், 12

வன்னியில் போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உதவ 25 தொன் மருந்துப் பொருள்களுடன் இந்திய மருத்துவக் குழு ஒன்று திங்கட்கிழமை இலங்கை வந்துள்ளது. மேலும் குழுவொன்றும் வரவுள்ளது எனவும் இலங்கை சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

போர் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். பட்டினியாலும், தொற்று நோய்களினாலும், காயங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு அத்தியாவசிய மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன.

இந்த மக்களுக்கு செஞ்சிலுவைச்சங்கம் மூலம் உதவ அனுமதிக்கவேண்டும் என இலங்கையிடம் இந்தியா கோரியது. இதற்கான அனுமதி இந்தியாவுக்குக் கிடைத்ததையடுத்து ரூ.7 கோடி மதிப்புள்ள மருந்துப் பொருள்களுடன் சிறப்பு மருத்துவ குழுவினர் திங்கட்கிழமை இலங்கை வந்தனர்.

இந்தக் குழுவில் மருத்துவர்களுடன் அறுவைச்சிகிச்சை நிபுணர்களும் இடம் பெற்றுள்ளனர். 25 தொன் மருந்துப் பொருள்களும், மருத்துவ உபகரணங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதேவேளை மற்றுமொரு குழு டில்லியிலிருந்து வரவுள்ளது. அதில் பரிசோதனைக்குக் கூட ஊழியர்கள் வருகின்றனர். அவர்களுடன் மேலும் 25 தொன் மருந்துப் பொருள்களும் கொண்டு வரப்படும் எனவும் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவ மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தமிழகத்தில் எதிர்ப்புப் போராட்டங்கள் வலுத்துள்ள நிலையிலும், தேர்தலும் வரவுள்ள நிலையிலும் இந்த மருத்துவப் பொருள்களை மத்திய அரசு அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# பூரண சரணாகதிக்கு ஓர் உதாரணம்

இலட்சுமணனே, சரணாகதிக்கு மிகவும் வெளிப்படையான உதாரணம். ராமனும், சீதையும், இலட்சுமணனும் காட்டுக்குச் சென்று, சித்ரகூடத்தைச் சென்றடைந்தனர். இராமன் இலட்சுமணனிடம் "நான் களைப்பாக இருக்கிறேன்; சீதையும் களைப்பாக இருக்கிறாள். இங்கு நாம் சிலகாலம் தங்குவது மிகவும் சிறந்தது. முடிந்தால் பத்து வருடங்கள் இங்கேயே தங்குவதற்கு வசதியான பர்ண சாலையைக் கட்டுவது உசிதமாகப் படுகிறது. உனக்குப் பிடித்த ஏதாவது ஒரு இடத்தில் பர்ண சாலையைக் கட்டு".

இவ்வாறு இராமன் கூறுவதைக் கேட்ட, இலட்சுமணனின் மனம் மிகவும் நொந்தது. அவர் துக்கம் அளவுக்கு மீறி, தன் தலையைக் குனிந்து கொண்டான். இதைக் கண்டு, சீதை இலட்சுமணனிடம், "ஏன் மனக்கஷ்டப்படுகிறாய், இலட்சுமணா? உன் அண்ணன், கடுமையாக ஒன்றும் கூறவில்லையே? நீ ஏன் இவ்வளவு மனத்துன்பப் படுகிறாய்?"

இலட்சுமணன், "என்றாவது நான் சுயமாக முடிவெடுத்ததுண்டா? எனது அன்னை, மனைவி, அரண்மனை வாழ்க்கையின் சுகங்கள் இவையனைத்தையும் உதறிவிட்டு, உங்கள் இருவருக்கும் சேவை செய்யவே கூட வந்தேன். நான் என்னை முழுமையாக இராமனிடம் ஒப்படைத்து விட்டேன். எனக்கென்று ஒரு சங்கல்பம் இப்போது எங்கிருந்து வரும்? இராமன் என்ன கட்டளையிட்டாலும் அதை நான் நிறைவேற்றத் தயார். அவ்வாறிருக்கும் போது இராமன், 'உனக்குப் பிடித்த இடத்தில் பர்ண சாலையைக் கட்டு' என்று கூறிய வார்த்தைகளின் கடுமையை நான் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்' என்று கூறினான்.

இராமன் இலட்சுமணனின் புனித உணர்ச்சிகளையும், அவனது சரணாகதியின் தூய்மையான மனோபாவத்தையும் புரிந்து கொண்டார். பர்ணசாலைக்குரிய இடத்தைத்தானே தேர்ந்தெடுத்தார். பிறகு அப்பர்ணசாலையை இருவருமே பாதுகாத்து வந்தனர்.

இத்தகைய பூரண சரணாகதியுடன் கூடிய தீவிர பக்தன். பின்னால் திடீரென்று ஒருநாள் மனம் மாறி "இராமா, நான் உம்மை விட்டு விலகி அயோத்திக்குத் திரும்ப நினைக்கிறேன். நான் எதற்காக உம்மிடம் இருக்க வேண்டும்? உம்மைத்தான் காட்டுக்குச் செல்லச் சொன்னார்கள். நான் அயோத்திக்குச் சென்று என்னுடைய மனைவியுடனும், அன்னையுடனும் கூட இருக்க விரும்புகின்றேன்". இவ்வாறு இலட்சுமணன் கூறியதைக் கேட்ட இராமன் அதிசயமடைந்தார். சிறிது நேரம் பொறு என்று கூறி அவனுடன் கூடவே இன்னும் சில தூரம் நடந்து, கடைசியில் ஒரு மரத்தடியில் இருவரும் அமர்ந்தனர். இலட்சுமணன் தான் இவ்வாறு இராமனுக்குச் செய்ய இருக்கும் சேவையை மறந்து, தவறாகப் பேசியதற்கு மிகவும் மனம் வருந்தினான். "நான் மிகவும் வருந்துகின்றேன். உம்மை விட்டுச் செல்ல எனக்கு விருப்பமே இல்லை. திடீரென்று எனக்கு இத்தகைய விபரீதமான எண்ணம் எப்படி ஏற்பட்டது என்று விளங்கவே இல்லை" என்று கூறினான்.

இராமன் அப்போது கூறினார். "நீ அரக்கி சூர்ப்பநகை இருக்கும் பிரதேசத்தில் நின்று கொண்டிருந்தாய். ஆகையால் உன் மனம் சஞ்சலமடைந்தது. இப்போது நாம் அந்த இடத்தை விட்டு வெளிவந்து விட்டோம். நீயும் பழைய நிலைக்கு திரும்பி விட்டாய்" என்றார்.

ஒரு அரக்க குணம் படைத்த மனிதன் இருக்கும் இடம் வழியாகச் செல்லும் போது கூட, இலட்சுமணன் போன்ற மிகச்சிறந்த பக்தனும் கூட பாதிக்கப்படுவான் என்ற படிப்பினையை இச்சம்பவம் உணர்த்துகிறது.

இராமன் அப்போது "சித்ரகூடம் முனிவர்கள் தங்குமிடம். ஆகையால் நாம் அங்கு சுகமாகத் தங்கலாம்" என்று கூறினார்.



ஆகவே நான் நீங்கள் கெட்டவர்கள் சேர்க்கையையும், கெட்ட மனிதர்கள் நடமாடுகின்ற கெட்ட இடங்களையும் முழுமையாக விலக்க வேண்டும். எது நல்லது, எது கெட்டது, எது நிரந்தரமானது, எது தற்காலிகமானது என்று பகுத்தறிந்து கொள்ளுங்கள்.

சுவாமி சின்மயானந்தா

# பாடசாலை மாணவர்களுக்கு முகாமைத்துவக் களப்பயிற்சி

வண்ணை, மார்ச் 12

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் குடாநாட்டுப் பாடசாலைகளில் அனர்த்த முகாமைத்துவ களப்பயிற்சிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

இதுவரை சண்டிலிப்பாய், நல்லூர், உடுவில், கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் 50 வரையான பாடசாலைகளில் மாணவ, மாணவிகளுக்கு அனர்த்த முகாமைத்துவக் களப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒவ்வொரு பாடசாலைகளிலும் 10 மாணவர்களும், ஆசிரியரொருவரையும் தெரிவுசெய்து முதலுதவிப் பயிற்சிகளை அந்தந்தப் பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தரின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன.

இதேவேளை- பாடசாலைகளுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் முதலுதவிப் பெட்டிகளை வழங்கியுள்ளதுடன், பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு நிறுவனத்தால் சான்றிதழ்களும் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-160)

# தவக்காலச் சிந்தனை



## அன்பு, இரக்கத்துடன் வாழவே மனிதர்கள் படைக்கப்பட்டனர்

"ஆண்டவர் இரக்கமும், கனிவும் உடையவர்;
எழுதில் சினம் கொள்ளாதவர்;
பேரன்பு கொண்டவர்.
ஆண்டவர் எல்லோருக்கும் நன்மை செய்பவர்;
தாம் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர்;

(தி.பா. 145: 8-9)

ஒரு முறை மாணவர் ஒருவர் தனது ஆசிரியரிடம் கேட்டார். "விலங்குகளில் இருந்து மனிதரை வேறுபடுத்தி காட்டுவது என்ன", ஆசிரியர் கூறினார் "நாய் நாயாக இருக்க குரைக்கும், மயில் மயிலாக இருக்க தோகை விரித்து ஆடும். மனிதன் மனிதனாக இருக்க இரக்கம் காட்ட வேண்டும்". என்று.

பெரியவர்கள் தவக்காலம் அருளின் காலம் என்று கூறுவார்கள். அது முற்றிலும் உண்மை. இந்த அரிய காலத்திலே மனிதர் தம்முடைய உண்மையான அடித்தளத்தைப் பற்றிச் சிந்திக்க அழைக்கப்படுகின்றனர். திருவிவிலியம், 'கடவுள் மனிதரை தனது சாயலாகப் படைத்தார்' என்று கூறுகின்றது. இதனுடைய உண்மை பற்றி நோக்கினால் அது, கடவுள் எவ்வாறு அன்பானவராக, இரக்கம் உடையவராக, பரிவு உடையவராக இருக்கின்றாரோ அவ்வாறு மனிதரும் இருக்கவே படைக்கப்பட்டுள்ளனர் என உணர்த்தும்.

எமது நாட்டிலே தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் மனித படுகொலைகளும், சித்திரவதைகளும் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களும்; இந்த இரக்கப் பண்பு மனிதரிடம் இருந்து மறைந்து விட்டதோ என்று எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன. இந்த உலகம் நல்லது. இதில் ஜீவராசிகள் அனைத்தும் நல்லவை. மனிதரும் நல்லவர். மனிதர் தமது அடிப்படையிலே தீமையானவர் அல்ல, மாறாகத் தமது தெரிவுகளிலேயே மனிதர் தீமையானதை நாடுகின்றனர்.

எனவே இந்தத் தவக்காலக் கொடையை நல்ல விதமாகப் பாவித்து, நம்முடைய இரக்கம் நிறைந்த ஆண்டவரைப் போன்று அனைத்து உயிர்களையும் மதித்து அன்பு செய்யும் [illegible]த்துக் கொள்வோம்.

ம.ஜெகன்குமார் அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க தமிழகத்தின் 14 கோடி கரங்களும் தயார்!

## ஆயுத மோதலுக்குத் தீர்வு காணாமல் மக்களை மீட்க முயன்றால் தோல்வியே ஏற்படும்:-ராமதாஸ்

சென்னை, மார்ச் 12

இலங்கையில் ஆயுத மோதலுக்கு தீர்வு காணாமல் போர்ப்பகுதியில் சிக்கியிருக்கும் மக்களை மீட்கப்போகிறோம் என்று படையை அனுப்பி வைத்தால் தோல்விதான் ஏற்படும். தமிழகத்தில் 7 கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களின் 14 கோடி கரங்களும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு இன்று தயாராக இருக்கின்றன - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை போர்ப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டால், அவர்களது உரிமைகளுக்காகப் போராட்டக் களத்தில் நிற்கும் போராளிகளை அழிப்பதற்கு எளிதாக இருக்கும் என்று இலங்கை அரசு கருதுகிறது.

இதற்கு இந்தியாவின் ஆதரவையும், அமெரிக்காவின் உதவியையும் இலங்கை அரசு நாடியிருக்கிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில், இந்திய வெளியுறவுத்துறை செயலர் சிவ்சங்கர் மேனன் அமெரிக்கா சென்றிருக்கிறார்.

வன்னிப் பகுதியில் உள்ள 2 லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்ற அமெரிக்காவின் தலைமையில் கூட்டு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக சிவ்சங்கர் மேனன், அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகிறார் எனச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

தமிழ் மக்களை அவர்களது பிறந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று சொல்லுவதும், அவர்களைக் கட்டாயமாக வெளியேற்ற முற்படுவதும் ஈழத் தமிழர்களின் அரை நூற்றாண்டுகாலப் போராட்டத்தை அவமதிப்பதாகும்.

தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடத்தில் இருந்து வெளியேற்றி இலங்கை படையினரின் சித்திரவதை மூகாம்களில் அடைத்திட முற்படும் எந்த நடவடிக்கைக்கும் இந்தியா ஆதரவு அளிக்கக் கூடாது.

இலங்கைப் போருக்கு இந்தியா வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ துணை நிற்பதை தமிழ்நாட்டில் இருக்கும் 7 கோடி தமிழர்களும் விரும்பவில்லை.



தமிழகத்தில் 7 கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களின் 14 கோடி கரங்களும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு இன்று தயாராக இருக்கின்றன. இந்த உணர்வை புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளிக்கும் வகையில், இந்திய அரசு தனது கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

முன்பு இந்திரா காந்தி காலத்திலும், அதன் பிறகு ராஜீவ் ஆட்சியின் போது, தொடக்க காலத்திலும் மேற்கொண்ட நிலைப்பாட்டை இந்திய அரசு இப்போது மேற்கொள்ள வேண்டும் என்பது தமிழர்களின் விருப்பம். இந்திரா காந்திக்கு இருந்த நம்பிக்கை, அவருக்கு இருந்த துணிச்சல், ஈழத் தமிழர்களுக்கு உதவவேண்டும் என்ற ஈடுபாடு இப்போதுள்ள அரசுக்கு வரவேண்டும். இதுவே ஒட்டுமொத்த தமிழர்களின் விருப்பமும், வேண்டுகோளும். அமெரிக்காவும் முன்பு சோமாலியாவில் மேற்கொண்ட முயற்சியை இலங்கையில் மேற்கொள்ள முயலக் கூடாது.

இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளாமல், போர்ப்பகுதியில் சிக்கித் தவிக்கும் மக்களை மட்டும் மீட்க போகிறோம் என்று புறப்பட்டால், சோமாலியாவில் ஏற்பட்ட தோல்விதான் இலங்கையிலும் ஏற்படும் என்பதை இந்தியாவும், அமெரிக்காவும் மறந்துவிடக் கூடாது - என்றுள்ளது.

## இலங்கையில் போர்நிறுத்தம் கோரி டாக்டர்கள் கறுப்புப்பட்டிப் போர்!

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று (11.03.09) முதல் டாக்டர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பணிக்கு செல்லும் போராட்டம் நடத்துகின்றனர் என்று சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்க பொது செயலாளர் ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி 11 ஆம் திகதி முதல் கறுப்புப்பட்டி அணிந்து பணிக்கு செல்லும் போராட்டம் நடத்த உள்ளோம். வரும் 15ஆம் திகதி ஆர்ப்பாட்டமும் 31ஆம் திகதி பணிப் புறக்கணிப்புப் போராட்டமும் நடத்துகிறோம் - என்றுள்ளது.

## ஒஸ்கார் தமிழன் ரஹ்மானுக்கு விளம்பரச் சம்பளம் ரூ10 கோடி?

மும்பை, மார்ச் 12

ஒஸ்கார் விருது பெற்றுள்ள முதல் தமிழன் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஹொலிவூட் பட வாய்ப்புகள் மட்டுமல்ல; விளம்பர வாய்ப்புகளும் தற்போது குவிந்த வண்ணமுள்ளன. ஒரு விளம்பரத்திற்கு ரூ. 10 கோடி வழங்க அமெரிக்க நிறுவனம் முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்லம்டாக் மில்லியனர் என்ற திரைப்படத்துக்கு இசையமைத்த ரஹ்மானுக்கு இரண்டு ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன. இதனால் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியுள்ளது.

விளம்பர உலகிலும் இவருக்கு 'மவுசு' அதிகரித்துள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற நிறுவனமான ஆப்பிள், ரஹ்மானை விளம்பர மொடலாக நியமிக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூ. 10 கோடி வழங்க முன்வந்துள்ளது எனத் தெரிகிறது.


## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை - இராசரத்தினம்

யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் இராஜன் மில் உரிமையாளர் சங்கரப்பிள்ளை - இராசரத்தினம் அவர்கள் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அருமைக் கணவரும் வரதராஜன், வனஜா, வாசுகி, வத்சலா, வசந்தி, வளர்மதி, வாமசக்தி ஆகியோரின் அருமைத் தந்தையாரும் சாந்தகுமாரி, இராமலிங்கம், காலஞ்சென்ற பாலசந்திரன், மற்றும் கருணாகரன், பொரியதம்பி, தனஞ்ஜயன், Dr.கமலராச ஆகியோரின் அன்பு மாமனாரும் காயத்திரி, லாவணியா, Dr.சிவதர்ஷனி, சாந்தகுமார், சயந்தன் Dr.சியாமா Dr.சிவந்தன், வித்தியா, ஷர்மிளா, கிருபரன், சிந்துஜா, ரஜீவ்தர்மேந்திரா, சுபாஷினி, கஜானி, சபேஷன், வாகீசன், தனுஷா, தாரணி, ஐங்கரன், அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவானி, சஜான், மீனாட்சி, அம்ரித்தா, பூஜித்தா, துவாரகேஷ், சந்தோஷ், ஆனந்தி ஆகியோரின் ஆசைப் பூட்டனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் - 15.03.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை கொழும்பு 05 ஜாவத்தை டொன்கரோலிஸ் றோட் 15 B, இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

தகவல் : மகள்- வாசுகி பாலச்சந்திரன் TP: 2501314


# நமது வரிப்பணத்தில் இலங்கைக்கு ஆயுதம்

## ஈழத்தமிழருக்கு காங்கிரஸ் துரோகம் செய்துள்ளது என்கிறார் வைகோ

வேலூர், மார்ச் 12



நமது வரிப்பணத்தில் தயாரிக்கப்பட்ட இந்திய ஆயுதங்கள் இலங்கை இராணுவத்தின் கைகளில் இருக்கின்றன. அங்கு ஈழத் தமிழர்கள் அன்றாடம் படுகொலை செய்யப் படுகிறார்கள் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் மக்கள் திரள் பொதுக்கூட்டம் வேலூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார் மேலும் அவர் பேசியவை வருமாறு -

தமிழர்கள் வசிக்கும் பகுதியில் 4 பக்கமும் படைகள் ஆயுதங்களுடன் நிற்கின்றன. எமது வரிப்பணத்தில் தயாரிக்கப்பட்ட இந்திய ஆயுதங்கள் இலங்கை இராணுவத்தின் கைகளில் இருக்கின்றன. இதுபோல் பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் ஆயுதங்களும் அவர்களது கைகளில் இருக்கின்றன.

இந்த நிலையில், வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்தில் பேசும்போது, கிளிநொச்சி விழுந்துவிட்டது, முல்லைத்தீவு பிடிபட்டது, ஆனையிறவு சாய்ந்தது என்று கூறினார். இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ சொல்வதைப் போல் டில்லியில் பிரணாப் முகர்ஜி கூறியிருக்கிறார். இத்தனையையும் சொல்லிவிட்டு தமிழர்களிடம் வந்து வாக்குக் கேட்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கப் போகிறார்களாம், சுடுகாட்டில் மறுவாழ்வு கொடுத்து என்ன பயன்? ஈழத்தமிழருக்கு கொடுப்பதற்காக மத்திய அரசு சார்பில் மருந்து ஏற்றிக்கொண்டு கப்பல் இலங்கைக்குச் செல்கிறது. அதை இலங்கை அமைச்சர் பெற்றுக்கொள்கிறார். அந்த மருந்துகள் இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு போய்ச் சேருமா? இலங்கையில் போரை நிறுத்தும்படி மத்திய அரசு இதுவரை சொல்லவில்லை.

போரை நிறுத்தச்சொல்லி உலகில் 100இற்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு சொல்லிவிட்டன. ஆனால் மத்திய அரசு இதுவரை சொல்லவில்லை. இதனால் உலக நாடுகளுக்கு இடையே குழப்பம் ஏற்பட்டு விட்டது. இதற்காகத்தான் நாங்கள் கையெழுத்து இயக்கத்தை அறிவித்து இருக்கிறோம்.

மருந்து, உணவு இல்லாமல் ஒவ்வொரு நாளும் எத்தனையோ ஈழத் தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் நாதியற்றுப் போகவில்லை.

கடந்த 5 ஆண்டுகளாக மத்திய அரசு ஈழத்தமிழர்களுக்குத் துரோகம் செய்துவருகிறது. அதற்கு என்ன காரணம்? ஏவியிருப்பது காங்கிரஸ் கட்சியும் அதன் தலைமையும்தான் - என்றார்.

## சட்டத்தரணிகள் போராட்டத்தால் 1500 கைதிகள் சிறையில் தவிப்பு

சென்னை, மார்ச் 12

தமிழகத்தில் சட்டத்தரணிகளின் போராட்டத்தால் 1,500 கைதிகள் பிணையில் வரமுடியாமல் சிறைகளில் தவிக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னை உயர் நீதிமன்றில் பொலிஸார் தடியடி நடத்தியமையைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இதனால் நீதிமன்றுகளில் வழக்கு விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளன. தினமும் தமிழகம் முழுவதும் நூற்றுக்கணக்கான கைதிகள் பிணையில் வெளிவருவார்கள். சட்டத்தரணிகள் போராட்டத்தால் கைதிகள் பிணையில் வரமுடியாமல் சிறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறார்கள்.


## மரண அறிவித்தல்



### சரவணமுத்து இராசையா

(கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி தேவஸ்தான பரிபாலனசபைத் தலைவரும், ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராசையா நேற்று (11.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஓவசியர் வேலாயுதம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வேலுப்பிள்ளை (ஆசிரியர்), பரஞ்சோதிஅம்மா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2009)வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊற்றல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
க.[illegible]



## பதவி வெற்றிடம்

### யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

கீழ் காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| | |
|---|---|
| பதவி: | எழுதுநர் |
| பதவி கு.இல. | 302/15 |
| சம்பளத் திட்டம் | 9450 - 11000 / 75 x 10 - 80 x 10 (66/2006 சுற்று நிருபப்படி) |

01.தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம்/வர்த்தகம் எண் கணிதம்/ எண்கணிதமும், சிங்களம்/தமிழ் பாஷை உட்பட 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சித்தியும், கூட்டுறவுச் சங்க லிகிதர் பதவியொன்றில் ஒருவருடத்துக்கு குறையாத அனுபவமும்.

மேலதிக தகைமைகள்

★ கணனி அறிவு

1. M.S.OFFICE 2. ACCOUNTING PACKAGE

★ ஆங்கில அறிவு

02. வயது: 18 - 45 வரை

03. விண்ணப்பமுடிவு திகதி: 2009.03.21

குறிப்பு:

01. வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்களது சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

02. விண்ணபங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் சமாச முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மாவட்டச் செயலாளர்,
யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

637, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டிலிருந்து தென்பகுதிக்கு நேற்று ஏ - 9 பாதையூடாக மரக்கறி வகைகள் அனுப்பப்பட்டன.
நாவற்குழிக் களஞ்சியத்திலிருந்து பொருள்கள் லொறிகளில் ஏற்றப்படும்போது எடுக்கப்பட்ட படங்கள்.
வெங்காய மூடை ஒன்றினை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், விவசாய சம்மேளன பிரதி நிதிகளுடன் லொறியில் சம்பிரதாய பூர்வமாக ஏற்றுவதையும் அரச அதிபர் கே.கணேஷ் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
தொழிலாளர்கள் மூடைகளை லொறியில் ஏற்றுவதையும் மரக்கறிகள் ஏற்றி புறப்படத் தயாராக உள்ள லொறிகளையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: பிரபா, ஓங்காரன்)

# 2½ வருடங்களுக்குப் பின் குடாநாட்டு உற்பத்திப் பொருள்கள் 11 லொறிகளில் ஏ - 9 ஊடாக தென்னிலங்கைக்கு

## நேற்று அனுப்பி வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 12

குடாநாட்டிலிருந்து சுமார் இரண்டரை வருடங்களின் பின்னர் மரக்கறி வகைகளை ஏற்றிக் கொண்டு ஏ - 9 பாதையூடாக நேற்று 11 லொறிகள் தென்னிலங்கைக்குப் புறப்பட்டன.

நேற்று முற்பகல் 11 மணியளவில் நாவற்குழி களஞ்சியத்தில் இருந்து குடாநாட்டு விவசாயிகளிடம் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறி வகைகள் ஏற்றப்பட்டன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மரக்கறி மூடை ஒன்றினை சம்பிரதாய பூர்வமாக ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

இதில் 48 ஆயிரத்து 99 கிலோ வெங்காயமும், ஆயிரத்து 318 கிலோ பீற்றூட் வகைகளும் இங்கிருந்து தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 31 ஆயிரம் கிலோ விதை வெங்காயம் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து புத்தளத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டிலிருந்து ஏனைய மரக்கறி வகைகளையும் லொறிகளில் ஏற்றித் தென்பகுதிக்கு அனுப்பவென முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் கடந்த இரண்டு நாள்களாக பெய்துவரும் மழை காரணமாக அத்தகைய முயற்சி பலனளிக்கவில்லை என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

முதற்கட்டமாக வெங்காயம், பீற்றுட் ஆகியவை அனுப்பப்படுகின்றன. அடுத்த கட்டமாக ஏனைய மரக்கறி வகைகளும் அனுப்பப்படும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் நேற்று முன்தினம் 22 லொறிகள் நாவற்குழிக் களஞ்சியத்தை வந்தடைந்தமை தெரிந்ததே.

ஏ-9 வீதியூடாகப் பொருள்கள் யாழ்.குடாநாட்டுக்கு வரத் தொடங்கியதையடுத்து, இங்கு பொருள்களுக்கு நிலவி வரும் தட்டுப்பாடு நீங்குவதோடு, அவற்றின் விலையும் கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தென்னிலங்கைக்கு குடாநாட்டு விளைபொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (203-09-04)

## மகளிர் தின விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், மார்ச் 12

சர்வதேச மகளிர்தின விழாவும் புனிதவதி சண்முகலிங்கம் எழுதிய 'நாடகம் நாட்டியம்' நூல் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கக்காரியாலத்தில் நடைபெறவுள்ளன.

கலாசார கூட்டுறவுப் பெருமன்றத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் க.கனகேஸ்வரன் ஆகியோர் வழங்குவர். (201)

## வினைத்திறமைகாண் பரீட்சை

வடக்கு மாகாண அலுவலகப் பணியாளர் சேவை வகுப்பு III, வகுப்பு IIஐச் சேர்ந்தவர்களுக்கான வினைத்திறமை காண் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாரதிசேவை வகுப்பு II அ, வகுப்பு II ஆ ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் 060 2262951, 071 6229465 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (201)

## செயலமர்வுகள்

மண்டுவில், மார்ச் 12

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 இற்கு புவியியல், வரலாறு, வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட அறிமுகச் செயலமர்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் காலை 8.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

வரலாறு நாளை மறுதினம் சனிக்கிழமையும் வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வி மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மேற்படி பாடங்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, குறித்த ஆசிரியரால் எழுதப்பட்ட செயற்பாட்டு பாடத்திட்டம் ஆகிய வற்றை செயலமர்வின்போது எடுத்து வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (201-59)




அம்பாள் துணை

**மணற்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்**

சிவபூமி என்று அழைக்கப்படும் இலங்கை, காரைநகரின் பழம்பெரும் ஆலயமான மணற்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கொடியேற்ற வைபவம் இன்று ஆரம்பமாகி நாளை இரண்டாம் மகோற்சவம் வழமைபோல் 1008 சங்காபிஷேகத்துடன் 13.03.2009இல் ஆரம்பமாகும். பன்னெடுங்காலம் சொற்பொழிவாற்றிய மறைந்த அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கும் 2ஆம் திருவிழா ஆஸ்தான வித்துவான் கோண்டாவில் மறைந்த நாதஸ்வரவித்துவான் கலாபூஷணம் V.K. கானமூர்த்திக்கும் மோட்ச அர்ச்சனை செய்யப்படும்.

**பங்குபற்றும் நாதஸ்வர தவில்வித்துவான்கள்**

1. அளவெட்டி
கலாபூஷணம் M.P.பாலகிருஷ்ணன் குழுவினர்.
2. இணுவில்
கலாபூஷணம் N.R.சுந்தரமூர்த்தி குழுவினர்.
3. நல்லைகந்தன் ஆஸ்தான வித்துவான்
நல்லூர் S.பாலமுருகன் குழுவினர்.
4. கோண்டாவிலைச் சேர்ந்த மறைந்த
கலாபூஷணம் V.K.கானமூர்த்தி அவர்களின் *(குழுவினர்)*

குறிப்பு: பகல் உற்சவம் முடிந்ததும் எல்லோருக்கும் அன்னதானம் எம் இல்லத்தில் சிறப்பாக நடைபெறும். தொடர்ந்து இரவு உற்சவம் நடைபெறும்.

வருக! வருக! அம்பாள் அருள் பெறுக
ஓம் சக்தி! ஓம் சக்தி!

அறுகம்புலம்,
காரைநகர். (83443) தம்பி கந்தப்பா குடும்பம்.



**ஆசிரியர் சேவையில் வெள்ளி விழாத் தாயவளே**

யா/இணுவில் இந்துக்கல்லூரி



**திருமதி நகுலேஸ்வரி சண்முகநாதன்**

அன்பின் ஊற்றே ஆரமுதே
அகலாது எமக்குள் நிறைஒளியே
ஆசிரிய சேவையிலே அரும்பணியாற்றி
இருபத்தைந்து வருடங்களை
கல்விக்காய் அர்ப்பணித்து
இன்முகம் காட்டியே இனிதான
அருள் சுரந்த தாயவளே
உன்னகத்தின் தூய்மைதனை
உலகத்தில் கண்டதில்லை
எந்நாளும் இளம்பிறை போல்
எப்போதும் நீ வளர்ந்து
நல்லானாய் நகுலேஸ்வரியே
நாளும் நீ வாழ்ந்திடவே
பொன்நாளில் வாழத்துகின்றோம்
வாழ்க அம்மா பல்லாண்டே

ஜெனனி பவன்",
அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு, இணுவில்.
தொ.பே. 0214590628

வாழ்த்துவோர்:
சுவிசில் வசிக்கும்
கருணாகரன் (மருமகன்), ஜெனனி (மகள்)
ஜெனிசன், கஜன் (பேரப்பிள்ளைகள்).



**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

1070 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 05 13 16 46

10-03-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400537024 - 400551739

ஜக்பொட் பரிசு ரூபா. 12,309,925/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 146,749 | 20/- | 2,934,980/- |
| 2 இலக்கங்கள் | 13,450 | 40/- | 538,000/- |
| 1 இல. + லக்கினம் | 13,265 | 60/- | 795,900/- |
| 2 இல. + லக்கினம் | 1,247 | 200/- | 249,400/- |
| 3 இலக்கங்கள் | 368 | 1000/- | 363,000/- |
| 3 இல. + லக்கினம் | 32 | 10,000/- | 320,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 12,309,925/- | - |
| மொத்தம் | | | 5,601,280/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 175,113 | | 6,101,280/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 12,637,975/-

தொடர் இலக்கம் 500548664 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 400547511-8-19 |
| நுவரெலியா | 400546591-7-42 |
| மொனராகலை | 400546645-8-35 |
| மாத்தளை | 400538879-9-09 |
| கொழும்பு | 400546000-6-38 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கொல்கத்தா ரெலிகிராப் வெளிப்படுத்துகிறது ★

# புல்மோட்டை இந்திய இராணுவ மருத்துவக் குழுக்கள் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம்

## வன்னியிலிருந்து மக்களை வெளியேற்றும் திட்டமும் கடற்பகுதிக்கான போட்டியே

கொழும்பு, மார்ச் 12

இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான இந்தியாவின் முதல் நடவடிக்கையே புல்மோட்டையில் இந்திய இராணுவ மருத்துவக் குழுக்கள் நிலைகொண்டுள்ளமை ஆகும்.

- இவ்வாறு 'கொல்கத்தா ரெலிகிராப்' என்ற இந்தியப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடலோரப் பகுதிகளை யார் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதே வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றும் திட்டத்தின் பின்னாலுள்ள நோக்கம் என்றும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது குறித்து அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்தியா தனது புறத்தில் மூண்டுள்ள தீயை அணைப்பதற்கு மனிதாபிமானத்தைப் பயன்படுத்த முயல்கிறது.

கொழும்பிற்கு இவ்வாரம் இந்திய விமானப்படை மூலம் இராணுவ மருத்துவக் குழுவை அனுப்பி வைத்துள்ளதன் மூலம் இந்தியா தனது இக்கொள்கையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. இன்னும் பல நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வருவதே இந்தியாவின் இந்த நடவடிக்கைகளுக்குக் காரணமாகும். அமெரிக்கா இதற்கு ஆதரவு கொடுப்பதற்கும் இதுவே பிரதானம்.

சீனா இலங்கையில் வீதிகளை அமைக்கின்றது. துறைமுகங்களை விஸ்தரிக்கின்றது. இலங்கை விடயத்தில் தலையிடுவதில்லை என இந்தியா சில வருடங்களாக கடைப்பிடித்த கொள்கையினால் உண்டானவெற்றிடங்களை சீனாபயன்படுத்துகிறது.

இந்திய வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் இலங்கை குறித்த நடவடிக்கைகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

2001 இற்கு பிந்திய ஆப்கானிற்காக இந்தியா முன்னெடுத்த செயற்பாடுகளை ஒத்தவையாக இவை அமைந்துள்ளன. மேலும் இராணுவ மருத்துவ குழுக்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு புதுடில்லி திட்டமிட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி, நிலக்கண்ணிவெடி அகற்றுதல், வர்த்தக உறவுகளை விஸ்தரித்தல், கல்வி நிறுவன பயிற்சி போன்றவற்றை இந்தியா வழங்கவுள்ளது.

பொதுமக்களை வெளியேற்றும் திட்டத்தை முன்னெடுக்குமாறு அமெரிக்கா தீவிரமாக வலியுறுத்தியுள்ள போதிலும் இந்த மக்களை எங்கு கொண்டு செல்வது என்பது பற்றித் தெளிவு இல்லை.

பொதுமக்களை வெளியேற்றும் திட்டத்திற்கான பிரதான காரணம் அந்த மக்கள் குறித்த கவலையல்ல. மாறாக இலங்கையை சுற்றியுள்ள கடற்பகுதியை யார் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதே.

திருகோணமலையிலிருந்து 49 கிலோமீற்றர் தொலைவில் புல்மோட்டையில் இந்திய இராணுவ மருத்துவக் குழுக்களை நிலைகொள்ளச் செய்துள்ளதன் மூலம், வெளிநாட்டு படையணிகள் தரையிறங்கலாம் எனக் கருதும் பகுதியில் இந்தியா முதலில் காலடி வைத்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# இடம்பெயர்ந்தோருக்கு உதவும் பொறுப்பு இலங்கை அரசுக்கு மாத்திரமே உரியது

### இந்திய மருந்துப் பொருள்களை கையேற்கும் நிகழ்வில் நிமால்



கொழும்பு, மார்ச் 12

மோதல்கள் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவும்பொறுப்பு இலங்கை அரசுக்கு மாத்திரமே உரியது, வேறு எவருக்கும் உரியதல்ல என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று இந்திய மருத்துவக் குழுவை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதம் குறித்த யதார்த்தத்தை உணராமல் அதனை, இதனைச் செய்யுமாறு அறிக்கை விடும் நாடுகள் போல இல்லாமல் இந்தியாவின் உதவி மிகவும் தேவையான தருணத்தில் கிடைத்துள்ளது.

பயங்கரவாதப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இந்தியாவின் ஆக்கபூர்வமான பங்களிப்பை இது வெளிப்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்பு மற்றும் நல்லுறவின் அடையாளம் இது.

இந்தியா மிகவும் சாதகமான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என நாங்கள் நம்புகிறோம். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவுவது இலங்கை அரசின் கடமை. அது வேறு எவருடையதுமல்ல.

எனினும், இந்தியா மிகவும் தேவைப்படும் நேரத்தில் உதவியுள்ளது. அவசியமான சுகாதார மற்றும் மருத்துவ வசதி களை உயர்ந்த தரத்தில் வழங்குவதற்கு இந் தியா வழங்கியுள்ள ஆதரவை நாங்கள் முழு மனதுடன் வரவேற்கிறோம்-என்றார் அவர்.

# பொதுச் சுகாதார உதவியாளர் பயிற்சிக்கு தெரிவாகியுள்ள 45 பேரின் விவரம்

யாழ்ப்பாணம்.மார்ச் 12

பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சிக்கு 45 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள சுகாதார திணைக்களத்தின் பிராந்தியப் பயிற்சி நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

வசந்தகுமார் அபராஜ் - கொக்குவில் மேற்கு, சிவஞானம் விஜிதரன் - ஏழாலை மேற்கு, கந்தசாமி கார்த்திகேயன் - திருநெல்வேலி கிழக்கு, சிவப்பிரகாசம் பிரணவன் - கொழும்புத்துறை, அரசரட்ணம் பிரகாஸ் - உடுவில் கிழக்கு, செல்வராசா கோபிநாத் - மானிப்பாய் வடக்கு, தங்கராசா நிரூசன் - அரியாலை, தனபாலர் சந்திரசேகர் - நல்லூர் கிழக்கு, தவராசா சரண்ராஜ் - காரைநகர், லோகேஸ்வரன் செந்தூரன் - சுதுமலை தெற்கு.

ஜெகநாதன் சேந்தன் - புத்தூர் மேற்கு, சின்னையா கோபிநாத் - அரியாலை, பவாநந்தன் சிந்துஜன் - வண்ணார் பண்ணை, தேவேந்திரன் கருணாகரன் -திருநெல்வேலி, விபுலானந்தராஜா உமாசுதன் - இணுவில் மேற்கு, கனகரத்தினம் கிரிதரன் - கல்வியங்காடு, அருளம்பலம் தஜீகரன் - நல்லூர், பசுவன் விஜயகுமாரன் - கைதடி தெற்கு, செல்வநாதன் சர்வாநந்தன் - அரியாலை மேற்கு, செல்வராசா செல்வபரன் - அளவெட்டி தெற்கு.

கந்தசாமி சுதர்சன் - ஆனைக்கோட்டை, செல்வநாயகம் சிவசங்கர் - பம்பலப்பிட்டி, குமாரசாமி குமாரதாசன்- தும்பளை, வேலாயுதன் ஜெயகாந்தன் - தொல்புரம் மேற்கு, ரட்ணவேலு செந்தூரன் - நல்லூர், நாகேஸ்வரன் மயூரன் - இருபாலை கிழக்கு, முருகையா றஜீகரன் - சுன்னாகம், யோ.ஜனகரன் - சில்லாலை, தர்மராஜா ராஜ்மயூரன் - சண்டிலிப்பாய், சுந்திரமோகன் நிரோஜன் - உடுவில் மேற்கு.

சிவஞானம் மயூரகாசன் - கொக்குவில் கிழக்கு, சுந்தரலிங்கம் வைகுந்தன் - கரணவாய் கிழக்கு, ச.சச்சூர்ஸன் - கொக்குவில், கே.கோகுலன் - தும்பளை மேற்கு, யூ.துராம் - மன்னார், ஏ.அன்ரனி - மன்னார்,ஏ.சாந்தன் - வவுனியா, எஸ்.கோபிநாத் - வவுனியா, கி.தபேசன் - வவுனியா, பெ.பிரசாட் - வவுனியா, சாமிநாதன் நிர்மலகாந்தன் - வவுனியா, நா.பவநேசன் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, மு.அருளாநந்தம் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, நா.சுப்பிரமணியம் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, ஜீ.நிறுபன் - சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி



*எமது வங்கி ஊழியரான இராசதுரை லிங்கேஸ்வரன் அவர்களின் பாசமிகு மாமனார்*

**மாணிக்கர் தில்லையம்பலம்**

அவர்கள் கடந்த (09.03.2009) திங்கட்கிழமை காலமாகிய செய்தி கேட்டுஆறாத் துயர் அடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**முகாமையாளரும், ஊழியரும்,**
**தேசியசேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### *மாணிக்கர் தில்லையம்பலம்*



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட மாணிக்கர் தில்லையம்பலம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/சுதுமலை வடக்கு அ.த.க. பாட சாலை, செல்லத்துரை பாடசாலை) 09.03.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கர் - நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் முகுந் தன் (கனடா), யமுனா (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), கௌரீசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் லிங்கேஸ்வரனின் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) மாமனாரும் இராசையா (இந்தியா), காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் இராசரத்தினம், கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை), பாலசுப்பிரமணியம், இரகுபதி (ஓய்வுபெற்ற படவரைஞர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாரதாமணிதேவி, நடராசா (அண்ணா தொழிலதிபர்), காலஞ்சென்ற விவேகானந்தன், புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

துரை வீதி,
இணுவில்.

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி பொன்னையா சரஸ்வதி*



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சரஸ்வதி நேற்று (11.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, மகாதேவா மற்றும் தவமணி (மணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் இராசமலர், பொன்மலர், மகிழ்மலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் சிறியதாயாரும் சற்குருநாதன், சற்குணராஜா, கணேசநாதன், பாலசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாமினி, பிரவீன், பிரியங்கன், சுகிர்தன், சுமித்திரன், கஜலக்சன், கிஷோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை மு.ப.10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். ஞா.பாலசுந்தரம்
(பாலா, வவி - நியூலக்கி ஆடையகம்)

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.

### *சின்னையா கதிர்காமநாதன்*



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கதிர்காமநாதன் நேற்று (11.03.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குருநாதர்-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வட்டர் கந்தையா, நாகமுத்து சகோதரர்களின் அன்பு பெறாமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாக்கியம், சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுவேந்திரன், ரவீந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுதாகரன்ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமலர், உதயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், டெனிஷாலினி, சுபாஜினி,சஞ்சீவன், பிரசாந்தன், கஜனா, ரஜீப்,ரஜிதா, சுரேன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் இலக்கம் 52/6 A.V. Road, 3 ஆம் ஒழுங்கை கொழும்புத்துறையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.சுவேந்திரன் (மகன்).

*52/6 ஏ.வி. றோட்,*
*3 ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வந்துள்ள இந்திய மருத்துவக்குழு ஒரு மாதத்திற்கே இங்கு சேவையாற்றும்

## இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் தகவல்



கொழும்பு, மார்ச் 12

வன்னியில் மோதலில் சிக்கிக் காயமடைந்த நிலையில் கொண்டுவரப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கென இலங்கை வந்துள்ள மருத்துவக்குழு ஒருமாத காலத்துக்கு மாத்திரமே இங்கு தங்கியிருக்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று புதன்கிழமை இந்திய மருத்துவக்குழுவை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அலோக் பிரசாத் இதனைக் குறிப்பிட்டார்.

எனினும், அவர்கள் இங்கு மேலும் இருக்கவேண்டிய சூழ்நிலை உருவானால் அவர்களது பணி மேலும் தொடரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் 70 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களையும் அலோக் பிரசாத் கையளித்துள்ளார்.

இந்திய மருத்துவக் குழுவின் வருகை இலங்கை - இந்திய அரசுகள் மத்தியிலான நெருக்கமான உறவுக்கான அற்புதமான உதாரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வன்னியில் மோதலில் சிக்கி இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவது குறித்து இந்தியா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் அலோக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இந்திய மருத்துவக்குழுவினர் வேகமாக இலங்கைக்கு வருவதற்கும் புல்மோட்டையில் மருத்துவமனையை அமைப்பதற்கும் உதவியமைக்காக இலங்கை அதிகாரிகளுக்கு இந்தியத் தூதுவர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இரு அரசுகளும் இது குறித்து தீர்மானித்து சில நாள்களுக்குள் இந்திய மருத்துவக்குழு தனது மருத்துவ சாதனங்களுடன் இங்கு வர முடிந்துள்ளமை இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதாகவும் அவர் கூறினார். (அ-சி)

(15 ஆம் பக்கத்தையும் பார்க்கவும்)

# வெள்ளை வானில் வந்தோரால் தமிழ் ஆசிரியை கடத்தப்பட்டார்

கொழும்பு, மார்ச், 12

வெள்ளவத்தை, பசல்ஸ் வீதியில் வைத்து நேற்றுமுன்தினம் 4.30 மணியளவில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் ஆசிரியை ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு, இராஜகிரிய றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கடமை புரியும் கணபதிப்பிள்ளை கேதீஸ்வரி (வயது 30) என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர் ஆவார்.

அவரது வீட்டிற்கு வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகள் குறித்த ஆசிரியையை பலவந்தமாகக் கடத்திச் சென்றுள்ளனர். வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட வருகின்றனர். (அ-சி)

## அங்குரஸ்ஸை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து எவ்வித தகவல்களையும் பாதுகாப்பு தரப்பினர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஜனாதிபதியினதும் அரசினதும் பொறுப்பாகும். அதனடிப்படையில் செயற்பட அரசு கடமைப்பட்டுள்ளது.

எனவே மக்கள் பங்குபற்றும் தேசிய மட்டத்திலான விழாக்களுக்கு அரச பாதுகாப்பு அமைச்சு ஊடாக பாதுகாப்பு அனுமதியைப் பெறவேண்டும். மேலும் இது போன்ற வைபவங்களை இயன்றளவில் குறைத்துக்கொள்ளவேண்டும்.

பிரதேச மட்டத்தில் நடத்தப்படும் வைபவங்களுக்கு சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்கள் ஊடாக அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டு வைபவங்களின் போது இது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களைத் தடுக்கும் வகையில் விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது குறித்து தகவல் திணைக்களமும் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

விசேட பாதுகாப்புத் திட்டம் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-சி-1-7)

## இனிமேலாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அப்பயவர்த்தனவே அரசின் சார்பில் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடக்கில் படுதோல்வியைச் சந்தித்து வரும் புலிகள் தெற்கில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தும் சதித்திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அச்சதித்திட்டத்தில் ஒன்றாகவே மாத்தறைத் தற்கொலைத் தாக்குதல் அமைந்துள்ளது.

முஹம்மது நபி அவர்களின் பிறந்த தினமான மீலாத் நபி எனும் புனித நிகழ்வில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்தாக்குதல் மூலம் புலிகள் எத்தகைய பயங்கரவாதிகள் என்பதை சர்வதேச நாடுகள் விளங்கிக்கொண்டுள்ளன. இப்படிப்பட்ட புலிகளின் பயங்கரவாதம் யுத்தத்தின் ஊடாக ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கிடையாது.

இந்தப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு சர்வதேச நாடுகள் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் - என்றார். (அ-சி)

# விசுவமடுவில் ஆட்லறிப் பீரங்கித் தளத்தை புலிகள் செவ்வாயன்று அழித்ததாக அறிவிப்பு

விசுவமடுப் பகுதியில் படையினரின் பாரிய ஆட்லெறி பீரங்கி தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணியினரும் கேணல் கிட்டு பீரங்கி படையணியினரும் இணைந்து தாக்கியழித்துள்ளனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டதாக இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டன.

இது தொடர்பாக இணையத்தளங்கள் தெரிவித்தவை வருமாறு:

விசுவமடு பகுதியில் உள்ள தேராவில் பகுதியில் படையினர் அண்மையில் அமைத்திருந்த ஆட்லெறி பீரங்கித் தளத்தை செவ்வாய்க்கிழமை அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணியின்ரும் கேணல் கிட்டு பீரங்கிப் படையணியினரும் இணைந்து தாக்கியழித்துள்ளனர்.

ஆறு ஆட்லெறி பீரங்கிகளை கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணியினரும் கேணல் கிட்டு பீரங்கி படையணியினரும் அவற்றினை அங்கிருந்து இயக்கி படையினர் மீது செறிவான பீரங்கித் தாக்குதல்களை நடத்திய பின்னர் அத்தளத்தினை அழித்துவிட்டு தளம் திரும்பினர்.

இதில் அப்பகுதியில் இருந்த ஆயிரக்கணக்கான எறிகணைகளும் வெடிமருந்துகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

படையினர் தரப்பில் 50-க்கும் அதிமான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் 3 கரும்புலிகள் உட்பட 7 போராளிகள் மரணமானார்கள். கரும்புலிகளான. லெப்.கேணல் மாறன், மேஜர் தமிழ்மாறன், கப்டன் கதிர்நிலவன் மற்றும் மேஜர் மலர்ச்செம்மல், கப்டன் ஈழவிழியன், கப்டன் காலைக்கதிரவன், கப்டன் கலைஇனியவன் ஆகியோரே மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மாத்தறைத் ....

(முதலாம் பக்கத்-தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

மாத்தறையில் மத நிகழ்வொன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். பொதுமக்கள் மீதான இவ்வாறான தாக்குதலகளுல் மத நிகழ்வொன்றை இலக்குவைப்பதும் வெறுக்கத்தக்கவையாகும்.

மாத்தறைத் தாக்குதலானது இலங்கை மோதல் நாட்டின் சகல சமூகங்களையும் பாதிக்கின்றது என்பதைப் புலப்படுத்துகின்றது.

வடக்கில் மோதல் நடைபெறும் பகுதிகளில் பொதுமக்கள் பலர் பலியாகின்றமை குறித்தும் செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் பணியாளர் கொல்லப்பட்டமை குறித்தும் நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன்.

இலங்கையின் சகல சமூகத்தவரினதும் அபிலாஷைகளைக் கருத்திலெடுக்கும் அரசியல் தீர்வே நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவரும் என்பதை பிரிட்டன் மீண்டும் வலியுறுத்துகின்றது. - என அவர் குறிப்பிட்டிருந்தார். (அ-சி)

## சர்வதேச நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

அரசு இப்போது பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதனால் மீண்டும் பொருள்களின் விலைகள் அதிகரித்து மக்கள் சிக்கலில் மாட்டுப்படப் போகின்றனர்.

இதனால், அரசு இப்போது சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2006இல் இலங்கையில் இருந்த சர்வதேச நிதி நிறுவனங்களையெல்லாம் இங்கிருந்து விரட்டி இனி சர்வதேச நாடுகளிடம் கடன் கேட்கப் போவதில்லை என்று கூறிய அரசு இன்று விரட்டப்பட்ட அந்த நிறுவனங் களிடமே கையேந்தி நிற்கின்றது.

வெளிநாடுகளில் உள்ள எம்மவர்களிடமிருந்து போதுமான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசு கூறியது. ஆனால், அரசின் எதிர்பார்ப்புப் பிழையாகப் போய்விட்டது.

இப்போது வேறு வழியின்றி அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்டு நிற்கின்றது.

இந்த வருடம் அரசைக் கொண்டு நடத்துவதற்கு 40 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகின்றது. ஆனால், அரசு 19 ஆயிரம் கோடி ரூபாவைப் பெற விண்ணப்பித்திருக்கின்றது.

எமது ஆட்சியில் 45 ஆயிரம் கோடி ரூபாவை இலவசமாக வழங்க சுமார் 50 நாடுகள் முன்வந்தன. ஆனால், இந்த அரசுதான் அதை இல்லாமல் செய்தது.

நாம் சர்வதேச நாடுகளிடமிருந்து தனித்து நின்று எதையும் சாதிக்க முடியாது. அது கிணற்றுத் தவளைபோல் ஆகிவிடும்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு இம்முறை இந்த நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்க்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-சி)

## புதுக்குடியிருப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

அதேவேளை, நேற்று முன்தினம் குப்பிளான் பகுதியில் இடம்பெற்ற மோதலிலும் இராணுவத்துக்கு இழப்புகள் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அன்றையதினம் புதுமாத்தளன் பகுதியில் நடைபெற்ற மோதலில் இருதரப்புகளுக்கும் இழப்புக்கள் ஏற்பட்டன என்று ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

அதேசமயம், விஸ்வமடுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறித்தாக்குதலிலும் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடிகளிலும் சிக்கி இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டன என்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்று விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய கள நிலைமை குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமது நிலைகளைத் தக்கவைத்துக் கொள்ளவதற்காக படையினருக்கு எதிரான கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அவற்றை முறியடித்தவாறு படையினர் மேலும் முன்நகர்ந்து வருகின்றனர்.

### கரும்புலிகள் ஊடுருவித் தாக்குகின்றனர்

விடுதலைப் புலி உறுப்பினர்கள் தற்போது சுமார் 37 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பிலுள்ள தமது நிலைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக புலிகள் பலத்த எதிர்த் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். படையினரின் இந்த நடவடிக்கைகளை முறியடித்து வருகின்றனர். அதேவேளை கரும்புலி உறுப்பினர்களும் ஊடுருவி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த ஊடறுப்புத் தாக்குதல்களில் புலிகள் இயக்கத்தின் சுமார் 400 பேர்வரை ஈடுபட்டுள்ளதுடன் அவ்வியக்கத்தின் முக்கியஸ்தர்களான லோரன்ஸ் மற்றும் சொர்ணம் ஆகியோரும் பங்களிப்பு வழங்கியுள்ளனர். படையினரின் பதில் தாக்குதல்களை அடுத்து பலத்த இழப்புக்களுடன் புலிகள் பின்நகர்ந்துள்ளனர் - என்றார். (அ-சி)

# தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தொண்டர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.


## மரண அறிவித்தல்

### தம்பித்துரை அடைக்கலம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை அடைக்கலம் நேற்று (11.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (12.03.2009) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நவாலி சென்.பீற்றர்ஸ் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

பல்கலைக்கழகங்களின் விசேட கற்கைகளின் தெரிவிற்கான உளச்சார்பு வகுப்புக்கள்

திங்கள், செவ்வாய்,
வியாழன் 1.00 - 3.00

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY-2009 A/L
மின் இரசாயனம்
ஆரம்பம்: 14.03.2009
SAT,SUN:- 6.30-7.30AM
BY:- RAJAH

தேவை

யாழ். நகரப்பகுதியில் கடை
வாடகைக்குத் தேவை
தொடர்பு:- 0715230943, 021 4590630.

விற்பனைக்கு

சன்ரெல் தொலைபேசி
விற்பனைக்குண்டு.
தொ.பே.0715230943, 0212228032.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org